பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்!



"பிசாசுக்கு எதிர்த்து
நில்லுங்கள்,
அப்பொழுது அவன்
உங்களைவிட்டு
ஓடிப்போவான்"
(யாக். 4:7).

Dr. உட்ரோ குரோல்

சத்தியவசன வெளியீடு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்!

Dr. உட்ரோ குரோல்

சத்தியவசனம்
9, வெங்கட்ராமன் தெரு, சின்ன சொக்கிகுளம்
மதுரை – 625 002
email: svmadurai@bsnl.in; svmadurai@yahoo.co.in
website: www.sathiyavasanam.in

© நற்செய்தி ஒலிபரப்பு ஸ்தாபனம் - வேதாகமத்திற்கு திரும்புக ஒலிபரப்பு

முதற்பதிப்பு: 2010 ஜூன் - 4500 பிரதிகள்

"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்!"
Messages delivered by Dr.Woodrow Kroll on Back To The Bible Radio Programme.

Translated by Bro.G.Wilson

Cover designed by Artist Sunderarajan, Visual Dots, Chennai

முகவுரை

பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். [1 யோவா.3:8]

அன்புடையீர்,

சாத்தானையும் அவன் சேனைகளையும் சிலுவையிலே வெற்றி சிறந்த நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

வேதாகமத்திற்கு திரும்புக பன்னாட்டு ஊழியத்தின் காரிய தரிசியான டாக்டர் உட்ரோ குரோல் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய புத்தகமான **"And He Will Flee"** என்ற புத்தகத்தை மொழி பெயர்த்து "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம். இச்செய்திகளை டாக்டர் உட்ரோ குரோல் அவர்கள் **"Back To The Bible"** வானொலி நிகழ்ச்சியில் தொடர் செய்தியாக வழங்கியிருந்தார்கள். இப்புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறோம்.

சாத்தானைக் குறித்து அநேக புத்தகங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. அவைகளில் சில வித்தியாசமான அனுபவங் களையும், போதனைகளையும் உள்ளடக்கியுள்ளதாயிருக்கிறது. இக்கடைசி காலத்தில் சாத்தானைப்பற்றிய பலவித உபதேசங்களும் அவனை மேற்கொள்வதற்கும் அவனது பிடியிலிருந்து தப்புவதற்கும் பலவிதமான வழிமுறைகளும் போதிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் மத்தியில் இப்புத்தகமானது வேறுபட்டு நிற்கிறது.

இப்புத்தகத்தின் சிறப்பு என்னவென்றால், நம் கரத்தில் உள்ள வேதாகமம் போதிக்கும் வழியில் சாத்தானை மேற்கொள்ளலாம் என விளக்குகிறது. எனவே இப்புத்தகத்தை நீங்கள் வாசிக்கும்போது உண்மையிலே சாத்தானை ஜெயிப்பதற்கு வேதாகமம் போதிக்கும் வழிகளை கற்றுக்கொள்வீர்கள். டாக்டர் உட்ரோ குரோல் அவர்கள் சாத்தானை வெற்றி கொள்வதற்கான வழிகளைப் பகுத்து ஆராய்ந்து நாம் புரிந்துகொள்ளும்வண்ணம் மிகவும் எளிய முறையில் விளக்கியிருக்கிறார்கள்.

இப்புத்தகத்தை நீங்கள் மாத்திரம் அல்ல, சாத்தானை மேற்கொள்ள இயலாமல் தடுமாறும் ஏனைய நமது விசுவாசி

களுக்கும் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்த டாக்டர் குரோல் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்புத்தகத்தை மொழிபெயர்க்கும் பணியை திரு.வில்சன் அவர்கள் மிகவும் சிரமமெடுத்து அதிக கவனத்துடன் செய்துள்ளார்கள். அவர்களது மொழிபெயர்ப்பு பணியையும் சேவையையும் பாராட்டுகிறோம். அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. ஆமென். [ரோமர் 16:20]

கே. பழனிவேல் ஆபிரகாம்
மேலாளர், சத்தியவசனம்

✶

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்கம்
	முன்னுரை	1
1.	உங்கள் எதிரியைத் தெரிந்துகொள்ளுங்கள்	9
2.	கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுங்கள்	15
3.	சாத்தானை எதிர்ப்பதற்குப் போதுமான முன் ஆயத்தங்களைச் செய்யுங்கள்	24
4.	சாத்தானின் உபாய தந்திரங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்	33
5.	சாத்தானின் தாக்குதல்களைத் தாங்கிக்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள்	42
	முடிவுரை	48

சாத்தான் உயிருடன் இருக்கிறான்; சாத்தான் நன்றாக இருக்கிறான்!

பல்லாண்டு காலமாக எவரும் தங்கள் உரையாடல்களில் சாத்தானைப் பற்றிக் குறிப்பிடாத நிலை இருந்தது. நிழல்களிலும், மறைவிலும், இருளிலும் மறைந்து வாழ்வது அவனது திட்டமாகும். பிரகாசமான வெளிச்சம் உள்ள இடங்களில் அவன் தோன்றுவதில்லை. சாத்தானோடு தொடர்புடைய செய்திகளும் அல்லது சாத்தானுக்கு நடத்தப்படும் வழிபாட்டு ஆராதனைப் பற்றிய செய்திகளும் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டு வந்தன. உண்மையில் அதிகமாய் கற்று தேர்ந்தவர்களும், பகுத்தறிவுடன் சிந்திக்கக்கூடியவர்களும் சாத்தானைப்பற்றிய செய்திகள் எதையும் முன்பு கூறமாட்டார்கள்.

ஆனால் அவையனைத்தும் இப்போது மாறிவிட்டன. சாத்தானை வழிபடுகிறவர்களும், சாத்தானைப் பின்பற்றுகிறவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகிறவர்களும் சாத்தானைப் பற்றிய பல புத்தகங்களை எழுதி வெளியிட்டு வருகின்றனர். கடந்த சில வருடங்களில் இத்தகைய புத்தகங்கள் ஏராளம் வெளிவந்துள்ளன. இந்நாட்களில் செய்தித்தாள்களும், பத்திரிக்கைகளும், சாத்தானைப் பற்றிய செய்திகளை மிகவும் சுவாரஸ்யத்துடன் வெளியிட ஆரம்பித்துள்ளன.

தொலைக்காட்சிக்கென்று நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்களும் தங்கள் நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களில் மிகப் பலர் சாத்தான் பற்றிய காட்சிகளை மிக ஆர்வத்துடன் பார்க்கிறார்கள் என்று கண்டுணர்ந்துள் ளார்கள். இயற்கைக்கு மாறான, ஆவி உலகைச் சார்ந்த நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமான அடிப்படையாகிவிட்டன. இதற்கு உதாரணம் "X Files" நிகழ்ச்சிகளாகும்.

சாத்தானைப் பற்றிய கதைகள் பெரும்பாலும் கொலைகளிலும், சடங்காச்சாரங்களை மீறுவதாகவும் முடிகின்றன. 1996இல் 20 வயதிற்கும் குறைவான வயதுடைய மூன்று வாலிபர்கள் ஒரு 15 வயது

பெண்ணைக் கற்பழித்து சித்திரவதை செய்து கொலை செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டதாகச் செய்திகள் பத்திரிக்கையில் வெளிவந்தன. அந்தப் பெண்ணின் உடல் சாத்தானின் ஒரு மேடையின் அருகில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மூன்று வாலிபர்களும் தாங்கள் சாத்தானை வழிபடுபவர்கள் என்பதை ஒத்துக்கொண்டனர். அப்பெண்ணைப் பலியிடுவதினால் நரகத்துக்குப் போக அனுமதி பெறலாம் என்று நம்பி தாங்கள் அக்கொலையைச் செய்ததாகக் கூறினர்.

நம்முடைய இன்றைய கலாச்சாரத்தில், சாத்தானை வழிபடுவது ஒரு பிரபலமான சமயமாக(**Religion**) மாறிவிட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில்மட்டும் 2 லட்சத்துக்கும் அதிமான "சூனியக்காரிகள்" (**WITCHES**) ஆவிகளை வைத்துக்கொண்டு கிரியை செய்கிறவர்களாக தங்களை பதிவு செய்துகொண்டு பணிபுரிவதாக ஒரு புள்ளி விபரம் கூறுகிறது. பதிவு செய்துகொள்ளாத சூனியக்காரிகளும் எண்ணற்றவர்கள் இருக்கின்றனர். ஒரு பிரபலமான சூனியக்காரியாகிய சிவில் லீக் இன்று உலகில் 8 பில்லியனுக்கும் அதிகமான சூனியக்காரிகள் இருப்பதாக கூறுகிறார்.

சாத்தான் தனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் முழுவதையும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுகிறான். "**பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்**"(**வெளி.12:12**). இந்த 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் சாத்தானுக்கு ஒரு அவசரம் தோன்றினால், தனக்குக் கிடைக்கும் எல்லா முறைகளையும் கருவிகளையும் கொண்டு, உலகில் உள்ள ஆண்களையும், பெண்களையும் இறுகப் பற்றிக்கொள்ளவே முயற்சிப்பான். எப்போதையும்விட அதிகமாகச் சாத்தான் இன்று முன்னணியில் உள்ள கலாச்சாரங்களில் புகுந்து ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அவன் தனது இருள் நிறைந்த சாம்ராஜ்யத்தைப் பரவச்செய்ய முயற்சிக்கிறான்.

சாத்தானின் இலக்கியம்

உலகில் பல வருடங்களாக சாத்தானைப்பற்றிய காரியங்களும், சாத்தானின் கலாச்சாரமும் மிக அதிகமாக பரவிக்கொண்டிருக்கின்றன. சாத்தானின் கொள்கைகளை "மெதுவாக"ப் பரப்பும் செயலைத் "**திகில் கதைகள்**" செய்கின்றன. இக்கதைகளின் மூலம், "ஸ்டீபன் கிங், **R.L.**ஸ்டோன்" போன்ற கதாசிரியர்கள் புகழ்பெற்று முன்னணியில் வந்துள்ளார்கள். பெரியவர்களுக்கான கதைகள் **The Dead Zone, The**

Sherong, Pt Sematary போன்ற கதைகளும், வாலிபர்களுக்கென்று **Goose bumps series** போன்ற தொடர் நாவல்களும் வெளிவந்துள்ளன. இவைகள் முற்றிலுமாகச் சாத்தானின் கொள்கைகளைப் பரப்புவதாகக் கூறிவிட முடியாது. எனினும் இவை சாத்தானைப்பற்றிய நூல்களைப் படிக்கத்தூண்டும் முதற்படியாக அமையும்.

வெளிப்படையாக, முழுக்க முழுக்கச் சாத்தானைப்பற்றிக் கூறும் நூல்களைக் கண்டுபிடிப்பது எளிது. சாத்தானின் நூல்களில் மிகவும் பிரபலமானதும், எங்கும் சாதாரணமாகக் கிடைப்பதும், சாத்தானின் கோவிலை ஆரம்பித்த ஆன்றன் லாவே எழுதியதுமான "**சாத்தானின் வேதம்**" என்னும் நூலாகும். சாத்தானின் வேதத்தைப் படிப்பவர்கள் அக்கிரமங்களைச் செய்யத் தூண்டப்படுவார்கள், பழிவாங்கும் செயல் களைச் செய்வார்கள், தங்கள் மனம்போலவும் தங்கள் விருப்பம் போலவும் தங்கள் ஆசைகளை நிறைவேற்றி வாழ்வார்கள். இந்தப் புத்தகத்தின் பிரதிகள் பல பொதுநூலகங்களில் புத்தக அலமாரிகளிலும் இடம் பெற்றிருப்பது ஆச்சரியப்பட வைக்கும் செய்தியாகும். கனடாவில் வெளியிடப்படும் **The Black Punkin, The Cloven Hoof, The Devil's Tavern"** போன்ற சாதாரணப் பத்திரிக்கைகளும் சாத்தானின் காரியங் களுக்கு அதிக விளம்பரம் அளிக்கின்றன. இந்தப் பத்திரிக்கைகளை மற்றப் பத்திரிக்கைகளுடன், கடைகளில் காணமுடியாவிட்டாலும் இவற்றைப் படிக்க விரும்புபவர்களின் கைகளுக்கு எப்படியோ சென்று சேர்ந்துவிடுகிறது.

இசை

சாத்தானின் கிரியைகள் வெளிப்பட இசை ஒரு மார்க்கமாக அமை கிறது. இசையானது நேரடியாகச் சாத்தானின் கிரியைப்போலக் காணப்படாவிட்டாலும், "**ராக் அன் ரோல்**" என்னும் நடனம் நின்று, உடலை அசைத்து, பாடல் பாடி ஆடுவதன்மூலம் சாத்தானின் பல சேட்டைகளைச் செய்து காட்டுகிறோம். தம் விருப்பம்போல் ஆடுதல், சந்தோஷம் தேடுதல் போன்ற விருப்பங்களை மக்கள் உள்ளத்தில் ஏற்படுத்தவே இத்தகைய இசை நிகழ்ச்சியைப் புகுத்தியுள்ளான். **ராக் அன் ரோல்** நடனத்தில் ஒருபகுதி நேரடியாகவே சாத்தானின் செயல் களைப் பிரத்தியட்சமாக செயல்படுத்திக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மாரிலின் மான்சன் (இவரது மறுபெயர் பிரயன் வார்னர்) இவர் ஒரு அபிஷேகம் பெற்ற, **சாத்தான் கோவிலின் போதகர்** ஆவார்.

ஃப்ளோரிடாவில் பகிரங்கமான ஆபாச நடத்தைக்காக இரண்டுமுறை கைது செய்யப்பட்டார். இவரது நடவடிக்கைகளுக்காக 'Salt Lake City' என்னும் நகரத்திலும் பலமுறை தடை செய்யப்பட்டார். இன்னும் பல இடங்களிலும் இவருடைய நிகழ்ச்சிகள் தடைசெய்யப்பட்டன. இருந்தபோதிலும் மான்சனின் நிகழ்ச்சிகளுக்கு ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் வந்து குவிகின்றனர். இதற்குக் காரணம் ஒழுக்கமும், கட்டுப்பாடும் இன்றி ஆண்களும் பெண்களும் கூடிக்குலாவவும், கட்டிப்பிடிக்கவும், முத்தமிடவும், பாலுறவுகொள்ளவும் அனுமதிக்கப்படுவதேயாகும்.

மாரிலின் இயக்கமானது தனது நோக்கத்தை மிகவும் வெளிப்படையாகவே கூறுகிறது. "கிறிஸ்தவத்தை ஒழிப்பதே" அவர்களது நோக்கமாகும். 'Metal Edge' என்னும் பத்திரிக்கையில் மான்சன் கொடுத்த ஒரு பேட்டியில், "ஒவ்வொரு காலகட்டத்திலும் கிறிஸ்தவத்தை ஒழித்துக்கட்ட ஒரு தைரியமான பராக்கிரமசாலி இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார். பாடல்கள் மூலம் சாத்தானைத் துதிக்கவும், சாத்தானைப் பற்றிய பாடல்களால் இன்னிசைக் கச்சேரி நடத்தவும் ஆரம்பித்த இந்தக் குழுவின் செயல் புதிதல்ல. மாரிலின் மான்சனின் வெளிப்படையான சாத்தானின் பிரச்சாரத் திட்டம் மிகவும் துணிகரமானதாயிருந்தது. மான்சனின் கூட்டத்தில் அதிகம் ஆட்கள் சேரவில்லை. ஆனால் தேசமெங்கும் பற்பல குழுக்கள் சாத்தானின் சாயலைப் பிரபலப்படுத்துவதற்காகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.

அக்கேரோன் என்னும் குழு வேதாகமத்தைக் கிழித்தல், தேவன் மீது சாபமிடுதல், ஒரு நிர்வாணமான இளம் பெண்ணைச் சாத்தானுக்கு உயிருள்ள பலிபீடமாகப் பயன்படுத்துதல் போன்ற கொடூரமான காரியங்களைச் செய்தது. இதைப்போல இப்போது தோன்றியுள்ள இன்னும் பல சாத்தானின் கொள்கைக்காரர்களும் குழுக்களும் உண்டு. அவைகள் மின் டிராட், சாத்தானின் கொள்கைக்காரர்கள், அகத்தங்களின் தொட்டில் என்பவைகளாகும். இக்குழுக்கள் அனைத்தும் சாத்தானைப் பின்பற்றுகிறவர்களின் உள்ளங்களையும், பண்பையும், ஒழுக்கங்களையும் கெடுப்பதைத் தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். பொதுவாக அவர்களுடைய பெயர்கள் அவர்களது பண்பைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

ஆரம்பம் முதலே ஹாலிவுட் ஒரு கெட்டுப்போகும் வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதாயிருந்தது. பல நடிகர்களின் வாழ்க்கையில் விபச்சாரமும், காம களியாட்டங்களும், பாலியல் ஒழுக்கக்கேடுகளும் முக்கியபங்கு வகித்துள்ளது. இந்நிலை நடித்துக்கொண்டிருக்கும் நடிகர்கள், ஓய்வுபெற்ற நடிகர்கள் இவர்களுடைய வாழ்க்கையில் பரவலாகக் காணப்படுகிறது. இந்தக் கடைசி நாட்களில் சாத்தான் ஆபாச சினிமாக்களை நன்கு பயன்படுத்தியுள்ளான். தொலைகாட்சிக்கு இதில் பெரும் பங்குண்டு. இது மக்களின் உள்ளத்தையும் வீடுகளையும் வெட்கப்பட வைக்கும் காரியங்களைக் காட்டுகின்றன.

ஹாலிவுட்டிலிருந்து உற்பத்தியாகி வெளிவரும் ஆபாசமான அசுத்தக் காட்சிகள் தவிர, இப்பொழுது இன்னும் பல வெளியீடுகள் சாத்தானை மகிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. "**சாத்தானைப் பற்றிப் பேசுங்கள்**" என்பது ஆன்றன் லாவே என்பவன் நடத்தும் சபையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குறித்த சிறியப் பாடமாகும். இது போன்ற இன்னும் பல வெளியீடுகள் சாத்தான் கொள்கைக்காரர்களால் உற்பத்தியாக்கப்படுகின்றன. இன்னும் பலர் ஆவி உலகத்தில் சாத்தான் குறித்த காரியங்களை வெளியிடுவதில் ஆர்வம்காட்டுகின்றனர். "**திரைப்பட வழிகாட்டி**" என்னும் அறிவர் டெட் பாயியர் என்பவரின் பத்திரிக்கையில் இளவயது வாலிபர்களைத் தூண்டி உற்சாகப்படுத்தும் "The Craft" என்னும் திரைப்படம் ஆவிகளின் கிரியைகளைப் பிரபலப்படுத்தும் விளம்பரப் படமாகும் என்று விமர்சனம் எழுதப்பட்டுள்ளது. இந்தப்படத்தில் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவிகளில் சிலர் ஆவிகளைக் கையகப்படுத்தி, அவற்றைக்கொண்டு மாந்திரீக வேலைகளைச் செய்யவும், தங்கள் எதிரிகளைப் பழிவாங்கும் செயல்களைச் செய்யவும் கற்றுக்கொண்டார்கள். இந்தப் படம் மவுனமாக வெளியிடும் செய்தியென்னவெனில், "**ஆவிகளைக் கொண்டு எதையும் செய்து சாதித்துவிட முடியும்**" என்பதாகும்.

சாத்தானையும், அவனுடைய நிகழ்ச்சிகளையும் மையமாகக் கொண்ட இப்படங்கள்தான் முதலில் வெளிவந்தவையல்ல. பல வருடங்களுக்கு முன்னால் வெளிவந்த "**ரோஸ்மேரியின் குழந்தை**", "**எக்சார்சிஸ்ட்**", "**டாமியன்**" போன்ற படங்கள் சாத்தானின் மேலும், ஆவிகளின் மேலும் விருப்பம் கொண்டவர்களைப் பிரியப்படுத்தின. இவை மக்களால் விரும்பிப்பார்க்கப்படுவதும், ரசிக்கப்படுவதுமாய்

இருந்தன. இந்தப்படங்கள் போதித்த செய்தி அவர்களுக்கு 'பிரியமான தாகவும், கவர்ச்சியானதாகவும், ஆவலுடன் தேடத் தூண்டுவனவாகவும், இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவு முக்கியமானதாகவும் காணப்பட்டது'.

நற்செய்தி

சாத்தான் ஒரு தோற்கடிக்கப்பட்ட பகைவன் என்ற உண்மையைக் கிறிஸ்தவர்கள் மறந்துவிட்டால் இப்பொழுது நடந்துவரும் சாத்தானின் கிரியைகளும், பிரச்சாரங்களும் கிறிஸ்தவர்களைச் சோர்வடையச் செய்து விடும். இயேசு தமது சீஷர்கள் 70 பேர்களை இரண்டிரண்டு பேராக ஊழியம் செய்ய அனுப்பியபோது, அவர்கள் **இயேசு ஒரு இரட்சகர்** என்று விசுவாசித்தார்கள். பிசாசுகளும் இயேசுவின் நாமத்தைக் கேட்டதும் பயந்தோடுகின்றன என்று அறிந்தபோது அவர்களுடைய ஆச்சரியம் அதிகரித்தது. அப்பொழுது இயேசு தம் சீஷர்களிடம், **"சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்" (லூக்.10:18)** என்றார்.

சாத்தான் தோல்வியடையப்போகும் ஒரு யுத்தத்தைச் செய்து கொண்டிருக்கிறான். தான் தோல்வியடையப் போவது உறுதி என்பது அவனுக்குத் தெரியும். யோவான் அப்போஸ்தலன் வெளிப்படுத்தின விசேஷத்தில் சாத்தானும் அவனுடைய சேனைகளும் இறுதியில் சென்றடைகிற இடத்தைக் குறித்து எழுதியிருக்கிறார். **"மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (வெளி.20:10).**

ஆனால் இந்த வசனம் கிறிஸ்தவர்களுக்குமட்டுமே தெரியும் என்பதில்லை. சாத்தானுக்கும் வேதஅறிவு உண்டு. வனாந்தரத்தில் சாத்தான் இயேசுவைச் சோதித்தபோது இயேசு ஒவ்வொரு சோதனையையும், வேதவசனங்களைக் கூறிச் சாத்தானை மடங்கடித்ததைப் பார்க்கிறோமே!(மத்.4:1-11). கர்த்தருடைய வசனம் சாத்தானுக்குத் தெரிந்திருப்பதாலும், தேவனுடைய சித்தத்தை எதிர்த்து அவன் பலமுறை போரிட்டுத் தோல்வியடைந்த வரலாறு அவனுக்கு நினைவிருப்பதாலும், அவன் எவ்வளவு தீவிரமாய் அழிவு வேலையைச் செய்ய முடியுமோ, அவ்வளவு உக்கிரத்துடன் அனைவரையும் தாக்கி அழிக்க முயற்சிப்பான்.

வானமண்டலத்தில் சாத்தான் தோற்கடிக்கப்பட்டிருந்தபோதிலும், தனிப்பட்ட முறையிலும் சாத்தான் தோற்கடிக்கப்பட முடியும். "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்க லாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8). சாத்தான் விஷப்பல் பிடுங்கப்பட்ட பாம்பைப்போல இருக்கிறான். இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறுவதைக் கேளுங்கள். **"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக்.4:7).**

சாத்தானை எதிர்த்து வெற்றி காண்பதற்குரிய வழிகள் வேதாகமத்தில் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. பலர் சாத்தானை எதிர்த்து வெற்றியடைய முடியவில்லை. ஏனெனில் வேதாகமம் கூறும் சாத்தானை எதிர்க்கும் வழிமுறைகளை அவர்கள் தெரிந்திருக்கவில்லை. இப்புத்தகத்தில் பின்வரும் அத்தியாயங்களில் சாத்தான் உங்களைவிட்டு ஓடிப்போகச் செய்யும்படி நாம் கையாளவேண்டிய வழிமுறைகள் விளக்கப் பட்டுள்ளன.

சுமார் பத்து வருடங்களுக்குமுன் ஒருவர் என்னிடம் அடிக்கடி கவலை யுடன் வந்து சந்திப்பதுண்டு. அவருடைய வாழ்க்கையில் சாத்தான் பல துன்பங்களைத் தந்துகொண்டிருப்பதாக அவர் நம்பினார். சந்தேகங் களையும், வேதனைகளையும் கொடுத்து அம்மனிதனைச் சாத்தான் துன்புறுத்துவதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அம்மனிதன் கூறிய கதைகளெல்லாம் நம்பும்படியாக இருந்தன.

பல தடவை நான் அவருடன் சேர்ந்து அவரது பிரச்சனைகளுக்காக ஜெபித்தேன். இருந்தபோதிலும் அந்த மனிதனுக்குத் துன்பங்கள் தொடர்ந்து வந்தன. ஆனால் இன்று அந்த மனிதர் தன் இரட்சகரிடம் அதிக பக்தியும் நம்பிக்கையும் உள்ள ஒரு கிறிஸ்தவ விசுவாசியாய் இருக்கிறார். ஏன்? அந்த மனிதர் வேதாகமத்தின் துணையுடன் சாத்தானோடு போராடினார். சாத்தான் அம்மனிதரைத் துன்புறுத்துவதை நிறுத்திவிட்டு ஓடிவிட்டான். வேதாகமத்தைக் கருத்துடன் படித்துச் சாத்தானின் தந்திரங்களையும், சதிகளையும் நன்கு உணர்ந்துகொண்டு, அந்த அறிவுடன் போராடியதால் எதிர்த்து நிற்க முடியாதபடி ஓடிவிட்டான். அந்த மனிதர் தனியாகச் சாத்தானை எதிர்க்கவில்லை. கர்த்தரின் வல்லமையுடன் சாத்தானை எதிர்த்தார். வேதாகமத்தைக் கருத்துடன் படித்தபடியால், சாத்தானின் சதிமோசங்களையும், தந்திரங்களையும் நன்கு அறிந்திருந்தார். அதேவேளையில்

இயேசுகிறிஸ்துவோடு நெருங்கிய உறவுகொண்டு அவருடைய துணை யுடன் சாத்தானை எதிர்த்துப் போரிட்டதால்தான் சாத்தான் அம்மனிதனைவிட்டு விலகியோடிப்போனான்.

கிறிஸ்துவில் ஒருவன் நிலைத்திருந்து, தன்னுடைய இரட்சகரில் முழுப்பலத்தைக் கண்டுபிடித்து, அவரிடமிருந்து பலத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஒரு கொடியானது செடியிலிருந்து தனக்குத் தேவையான சத்துணவை உறிஞ்சிக்கொள்வதுபோலக் கிறிஸ்து வினிடமிருந்து சக்தியைப் பெற்றுப் போராடவேண்டும். அப்பொழுது கிறிஸ்துவில் வெற்றியைக் கண்டடைய முடியும். இது சாத்தானுக்குத் தோல்வியாக முடியும்.

நீங்கள் இந்தப் புத்தகத்தை ஒருமுறை கருத்துடன் வாசித்து முடித்தபின் இதை ஒரு நண்பருக்கோ, ஒரு கல்லூரி மாண வனுக்கோ, அல்லது ஒரு இளவயது வாலிபனுக்கோ வாசிக்கக் கொடுங்கள். இவர்கள் சாத்தானின் போராட்டங்களில் சிக்கி, அவனை வெற்றிகொள்ள வகை தெரியாமல் திகைத்துக் கொண் டிருப்பார்கள். இப்புத்தகத்தைப் படித்து, இதில் கூறப்பட்டுள்ள வழிகளைப் பின்பற்றிச் சாத்தானை வெற்றி காண்பார்கள்.

"வேதாகமத்தின் அடிப்படையில் நீங்கள் சாத்தானை எதிர்த்தால் அவன் பயந்தோடிப் போவான். தேவனுடைய வார்த்தை அதிகாரமும் வல்லமையும் உள்ளது".

உங்கள் எதிரியைத் தெரிந்துகொள்ளுங்கள் !

நம் கண்ணால் பார்க்கமுடியாத ஒரு எதிரியோடு சண்டையிடுவது கடினமான ஒன்றாகும். 1984இல் போபாலில் யூனியன் கார்பைட் தொழிற்சாலையிலிருந்து ஒரு விஷவாயு வெளியாகி அப்பிரதேச மெங்கும் பரவியது. அப்பகுதியில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இந்த விஷவாயுவைச் சுவாசித்ததினால் அவர்களது உடல்நிலை பாதிக்கப்பட்டது. அந்த வாயு ஒரு நிறமற்ற மேகம் போன்று இருந்தது. அந்த வாயுவைச் சுவாசித்தவர்களுக்கு மூச்சுத் திணறியது. மயக்க நிலை யடைந்து தடுமாறினார்கள். தள்ளாடிக்கொண்டே மருத்துவமனைக்குச் சென்றார்கள். ஆனால் பலர் போகும் வழியிலேயே மரித்து விழுந்தார்கள். தங்களைக் கொல்வது எது என்று அவர்களுக்குத் தெரியாதிருந்தது.

இதுபோலவே சாத்தானும் உருவமற்று, மறைந்திருந்து மக்களை அழிக்கத் திட்டமிடுவான். அவன் மெதுவாக, பிறர் அறியாமல் நுழைபவன். அவனால் தாக்கப்பட்ட பலருக்குத் தாங்கள் சாத்தானால் பாதிக்கப்படுகிறோம் என்பதுகூடத் தெரியாது. சாத்தானுக்குப் பல மறுபெயர்கள் உண்டு என்று வேதம் கூறுகிறது. அவனுடைய பெயர் "**லூசிபர்**". ஆனால் அவன் எல்லாராலும் "**சாத்தான்**" என்று அழைக்கப் படுகிறான். "**சாத்தான்**" என்பதன் பொருள் "**எதிராளி**" என்பதாகும். அவன் "**பிசாசு**" என்றும் அழைக்கப்படுகிறான். சாத்தானுக்குப் "**பெயெல் செபூல்**" என்றும் பெயர் உண்டு. இதன் பொருள் "**பொய்களின் அதிபதி**" மேலும் "**வலுசர்ப்பம்**" என்பதும் இவனது பெயராகும் (வெளி. 12:9). இது "**பழைய பாம்பு**" எனப்படும் (வெளி.20:2). "**சோதனைக்காரன்**" என்பதும் சாத்தானின் பெயரே(மத்.4:3). "**பிசாசுகளின் தலைவன்**" என்றும் இவனை அழைப்பார்கள் (மத்.12:24). "**இப்பிரபஞ்சத்தின் தேவன்**" இதுவும் சாத்தானையேக் குறிக்கிறது (2கொரி.4:4). இப்படிச் சாத்தானுக்குப் பல பெயர்கள் உண்டு. ஆனால் இவை ஒவ்வொன்றும், சாத்தானின் தன்மை களில் நாம் மறக்கமுடியாத ஒவ்வொன்றை நமக்கு நினைவூட்டுகின்றன.

சாத்தானில் நல்ல அம்சங்கள் எதுவுமே இல்லை. சாத்தான் இவ்வுலகில் உள்ள எந்தக் கொடிய துன்மார்க்கனைக் காட்டிலும்

பயங்கரமானவன், கொடியவன், கட்டுக்கடங்காதவன், தீயவன், வஞ்சகன், தந்திரம் உள்ளவன். சாத்தானின் தனித்திறமை அவன் தன்னை பலவகையான ரூபங்களிலும், உருவகங்களிலும் மறைத்துக் கொள்வதாகும். கேலிச்சித்திரப் படங்களில் உள்ளது போன்று சிவப்பு ஆடையணிந்து வாலுடன் அவன் சித்தரிக்கப்படுவான். கவர்ந்து இழுக்கக்கூடிய சக்தியாகவும் செயல்படுவான். வெளித்தோற்றத்தில் தீமையில்லாத எஜமான் போலவும் செயல்படுவான். இன்றைய நவீன சமுதாயத்தில் அவனது இந்தத் தோற்றம் மிகவும் முக்கியமானது. அவனை மக்கள் கண்டுகொள்ளாமல் இருக்கவேண்டும் என்பது அவனது குறிக்கோள். சாத்தான் எந்த உருவத்தில் வெளிப்பட்டாலும் சரி அவனை அடையாளம் கண்டுகொள்வதே நீங்கள் சாத்தானைத் தோற்கடித்து அவன் உங்களைவிட்டுப் பயந்தோடச் செய்யும் வழியாகும். அவன் எந்த உருவத்தில் இருந்தாலும் அவனைத் தோற்கடிப்பதற்கு முதல்படி, அவனைக் கண்டுபிடிப்பதேயாகும். அவனை அடையாளம் கண்டு கொண்டீர்களானால் அவனைத் தோற்கடிப்பது எளிது. நீங்கள் அவனை அடையாளம் கண்டுகொள்ளவில்லையானால், அவனை எதிர்க்கவும், துரத்தவும் உங்களால் முடியாது.

நம்முடைய மாபெரும் பரம எதிரியைக் கண்டுபிடிப்பது எப்படி? சாத்தானைக் குறித்து நம்முடைய வேதம் வேறு என்ன சொல்லுகிறது? இந்த உண்மைகளைச் சிந்தியுங்கள்.

அ. சாத்தான் ஆளத்துவம் உள்ள ஒரு நபர்:

சாத்தான் ஒரு உருவமற்ற சக்தியல்ல; ஆளத்துவம் உள்ள ஒரு நபர். அவனுக்குச் சுயஉணர்வு உண்டு. அவன் அதிக விழிப்புணர்வுடையவன். தான் செய்வது இன்னது என்று அறிவான். மத்.4:9 இல் சாத்தான் இயேசுவைச் சோதிக்கும்போது அவன் இயேசுவை ஒரு மலையின் உச்சிக்கு அழைத்துச் சென்று, அவருக்கு பரந்து விரிந்த செழிப்பான உலகத்தைக் காட்டிவிட்டு, "நீர் கீழே சாஷ்டாங்கமாக விழுந்து என்னைப் பணிந்துகொண்டால் இவை எல்லாவற்றையும் நான் உமக்குத் தருவேன்" என்றான். இக்கூற்றில் சாத்தான் "**நான்**", "**என்னை**" என்னும் பிரதிப் பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். இதிலிருந்து அவன் தன்னை வாழும் நபராகக் காட்டுகிறான் என்று அறிகிறோம். மேலும் சாத்தானுக்கு ஒரு அறநெறி உணர்வு உண்டு. நல்லது எது? தீமையானது எது? என்பது அவனுக்குத் தெரியும். அவன் இதை அறிந்துகொண்டு தீமையான காரியங்களையேத் தெரிந்தெடுத்துச்

செய்கிறான். இயேசுவைச் சாத்தான் சோதித்த அதே நிகழ்ச்சிக் குறிப்பை மத்தேயு எழுதுகையில், **"அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப் படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்"** என்று குறிப்பிடுகிறார்(மத்.4:1). சாத்தானுக்குச் சரியானது எது? தவறானது எது? என்று பிரித்தறியத் தெரியாமல் இருந்திருந்தால் அவன் இயேசுவைச் சோதித்திருக்க முடியாது. சாத்தானுக்குத் தான் செய்வது தவறு என்று நன்கு தெரியும். வேறு எந்தச் சக்திக்கும் இந்த அறிவு கிடையாது.

மேலும் சாத்தானுக்கு உணர்ச்சியும் அறிவும் உண்டு. அவனுக்குத் தனி உணர்ச்சிகள் உண்டு. அவன் உணர்ச்சிகளை வெளிப்படுத்து வான். வெளி.12:12ஐப் பாருங்கள். **"ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து மிகுந்த கோபங் கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக் கேட்டேன்"**. உணர்ச்சியுள்ள ஒருவருக்குத்தான் இத்தகைய உணர்வுகள் ஏற்படும்.

மின்சாரம் ஒரு சக்தி. அது உங்களுக்குத் தீமை விளைவிக்கலாம். ஆனால் அதற்கு உங்கள்மேல் வெறுப்போ, கோபமோ, பொறாமையோ கிடையாது. காற்று இன்னொரு சக்தி. காற்றுக்கு இவ்வுலகில் பேரழிவை யும், பெருத்த சேதத்தையும், மரணத்தைக்கூட ஏற்படுத்தும் சக்தி உண்டு. ஆனால் அதற்கு இப்படிச் செய்யவேண்டும், இந்த நாசத்தை ஏற்படுத்த வேண்டும், மனுஷர்களுக்கு பாதிப்பை உண்டாக்க வேண்டும் என்னும் எண்ணமே கிடையாது. ஆனால் **சாத்தான் சிந்தித்துத் திட்டமிடும் ஆற்றல் படைத்தவன். உங்கள்மேல் அவனுடைய திட்டம் உங்களை அழிக்க வேண்டும் என்பதே!** (1பேது. 5:8).

ஆ. சாத்தான் ஒரு அசாதாரணப் பிறவி

சாத்தான் ஆளத்துவம் உள்ளவனாய் இருந்தாலும் அவன் ஒரு மனிதன் அல்ல. **"நீ அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்"** என்று எசேக். 28:14 இல் பார்க்கிறோம். **கேருப்** என்பது வாழ்த்து அட்டைகளில் காணப்படுவது போன்ற அழகான குழிவிழும் சிவப்புக் கன்னங்கள் உள்ள தேவதூதர்கள் அல்ல. **கேருப்** என்பதன் பன்மை **"கேருபீம்"**. இவை தேவனால் படைக்கப்பட்ட ஜீவராசிகளில் பலமும் வல்லமையும், பயங்க ரமும் நிறைந்த ஒரு படைப்பாகும். இவை எப்போதும் பலம், அதிகாரம் இவற்றைக் குறிக்கும் இடங்களில் குறிப்பிடப்படும். உதாரணமாக தேவன் கேருபீன்களின் மத்தியில் வாசமாயிருக்கிறவர் என்று 2 சாமு.6:2 இல் காண்கிறோம். உடன்படிக்கைப் பெட்டியின்மேல் இரண்டு

கேருபீன்கள் வைக்கப்பட்டுள்ளன (யாத்.25:18-22). இந்தக் கேருபீன்களின் இறக்கைகளின் குரல் எசேக்கியேலின் தேவாலயத்தில் மிகவும் சத்தமாகக் கேட்டது. இது வெளிப்பிராகாரம் வரைக் கேட்டது (எசேக். 10:5).

எசேக்கியேல் சாத்தானை, "**அபிஷேகம் செய்யப்பட்ட கேருபே**" என்று அழைக்கும்போது அவன் ஒருதடவை எண்ணெயால் அபிஷேகம் செய்யப்பட்டவன் என்று பொருள் இல்லை. "**அபிஷேகம் செய்யப்பட்ட**" என்று மொழியாக்கப்பட்டிருக்கும் எபிரேயச்சொல், "**வெளியே விரிக்கப்பட்ட**" என்று பொருள்படும்.

லூசிபரின் இறக்கைகள் மற்ற எல்லாக் கேருபீன்களின் இறக்கைகளின்மேல் விரிக்கப்பட்டிருந்தன. இதன் பொருள், "இவனே, **கேருபீன்களின் தலைவன்**" என்பதாகும். தேவனால் படைக்கப்பட்ட தேவதூதர்களில் இவன் உயர்ந்தவனாயிருந்தான். மற்ற எல்லாத் தூதர்களையும் ஒரு அணியாகக் கூட்டியது இவனது பணியே. அவைகளைப் பாதுகாத்தான். ஆனால் அவனது பெருமை மட்டம் தட்டப்பட்டபோது, இவன் அனைத்தையும் அழிக்க முனைந்தான். மற்ற எல்லா தேவதூதர்களையும்விட சாத்தான் வலிமைமிக்கவனாயிருந்தான். மேலும் எந்த ஒரு பராக்கிரமசாலியான மனிதனையும்விட இவன் அதிகப் பலம் வாய்ந்தவன் ஆவான்.

இ. சாத்தான் அதிகப் பொல்லாதவன்

எல்லாத் தூதர்களுக்கும் மேலான பிரதான தூதன் சாத்தானே. ஆனால் அவனால் தன்னுடைய அழகையோ, பதவியையோ ஒன்றும் செய்ய முடியாது. அவனிடம் பெருமையும், அகங்காரமும் குடிகொண்டது. தேவனை அவருடைய சிங்காசனத்திலிருந்து எழுப்பி விட்டுவிட்டுத் தான் அந்த சிங்காசனத்தில் அமரலாம் என்று அவன் உள்ளத்தில் நினைத்தான்.

சாத்தானுக்குத் தான் தேவனாக இருப்பதற்கு ஆசை (ஏசா.14:12-15). அவன் தேவன் ஆவதற்கு தேவனால் படைக்கப்பட்ட அனைத்தையும் அவன் அழிக்கவேண்டியதாய் இருந்தது. தேவன் தமது சாயலாக படைத்திருந்த அனைவரையும் அழித்துவிட்டுச் சாத்தான் தன் சாயலில் படைக்க விரும்பினான். இந்த எண்ணமே சாத்தானை இயக்கிக்கொண்டிருக்கும் தாரக மந்திரம். இது சாத்தானின் கிரியைகள் அனைத்திலும் வெளிப்படுகிறது. உங்கள் வாழ்க்கையில் அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் இது காணப்படும். இயேசு இதைத்தான்

சுருக்கமாக யோவான் 10:10இல் இவ்வாறு குறிப்பிட்டார்:

"திருடன் திருடவும், கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்".

சாத்தான் கெட்டவன் என்பதை நாம் அறிவதை அவன் ஒருபோதும் விரும்புவதில்லை. இதனால்தான் பவுல் 2 கொரி. 11:14 இல் இவ்வாறு சாத்தானைப் பற்றிக் கூறுகிறார்: "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே!". லூசிபர் ஒரு தனிச்சிறப்புள்ள அழகான ஒரு பிறவி. எனவே ஏமாந்துவிடாதீர்கள். அவன் எவ்வளவு கவர்ச்சிகரமாகத் தோன்றினாலும், அவன் செய்வது எதுவும் உங்களுக்கு நன்மை தருவதல்ல. அவன் உங்களுக்குத் தரும் இன்பங்களும், கவர்ச்சிகளும் உள்ளுக்குள் பயங்கரமான முடிவைக் கொண்டவையாகும். அவற்றின் முடிவு உங்களுக்குப் பேரழிவையும், வேதனையையும் தரும். சாத்தான் முழுக்க முழுக்கக் கெட்டவன், அவன் ஒரு பொய்யன், அவன் ஒரு ஏமாற்றுப் பேர்வழி, அவன் அழிப்பவன், அவனை ஒருபோதும் நம்பமுடியாது.

இப்பொழுது நீங்கள் சாத்தான் எப்படிப்பட்டவன் என்று அறிந்துகொண்டீர்கள்

புகழ்பெற்ற டிரபால்கர் போர் நடைபெறுவதற்கு முன்னர், படைத் தளபதியான நெல்சன் பிரபு தன்னுடைய உயர் அதிகாரிகளில் இருவர் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதில்லை என்று கண்டுபிடித்தார். அவர் அந்த இருவரையும் கப்பலின் மேல்தளத்துக்கு அழைத்துச் சென்று, தூரத்தில் தெரிந்த எதிரிகளான பிரெஞ்சுப் படையை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். அவர்களிடம், "அதோ, நமது எதிரிகள்; இப்பொழுது நீங்கள் இருவரும் ஒப்புரவாகிக் கைகுலுக்கிக் கொள்ளுங்கள்" என்று கட்டளையிட்டார்.

இப்பொழுது நாம் நமது எதிராளியைக் கண்டுபிடித்துவிட்டோம். எனவே நாம் நமக்குள் இருக்கும் பிரிவினைகளையும், பகையையும், சண்டைகளையும் மறந்து, கைகோர்த்துக்கொண்டு ஒற்றுமையுடன் நமது எதிராளியை எதிர்த்து ஒழிக்கக் கிளம்புவோம். நம்முடன் இருக்கக் கூடியவர்கள் யார்? யார்? நமக்கு அதிகாரிகளாயிருந்து தலைமை தாங்கி நடத்துகிறவர்கள் யார்? என்பதை அறிந்து ஒன்றுபடுவோம்.

நம்முடன் இருப்பவர்கள் நமக்கு எதிரிகளல்ல. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து முழுமனதுடனும், முழுப்பலத்துடனும், நமது எதிராளியாகிய சாத்தானை எதிர்த்து அழிக்கத் துணிந்து புறப்படுவோம். நாம் அவனுக்குப் பயப்பட வேண்டியதில்லை. நாம் அவனால்

முட்டாளாக்கப்பட வேண்டியதுமில்லை. சாத்தான் உண்மையிலேயே எப்படிப்பட்டவன் என்று வேதம் நமக்குத் தெளிவாகக் கூறுகிறது:

1. சாத்தான் தேவனுடைய பரம எதிரி.

2. சாத்தான் தேவகுமாரனாகிய இயேசுவை வெறுப்பவன்.

3. இயேசுவை ஏற்றுக்கொண்ட பிள்ளைகளாகிய நம்முடைய ஆத்துமாக்களைச் சாத்தான் அழிக்க முயற்சிக்கிறான்.

நீங்கள் சாத்தானை எதிர்த்தால் அவனைத் தோற்கடிக்க முடியும். அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். அடுத்த அத்தியாயத்தில் இயேசு எப்படிச் சாத்தானை எதிர்த்து வெற்றிகரமாக அவனைத் தோற்கடித்தார் என்பதைப் பார்க்கலாம்.

கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுங்கள்!

ஒரு தகப்பனும் மகளும் வழிநடந்து சென்று கொண்டிருந்தார்கள். வழியில் சேறும், சகதியுமான ஒரு இடத்தை அவர்கள் கடக்கவேண்டிய திருந்தது. தகப்பன் முன்னே சென்றார். அவர் பின்னால் வரும் தன் மகளைப் பார்த்து, "மகளே, சேற்றில் காலை வைத்து, உன் காலை அழுக்காக்கி விடாதே" என்றார். அப்பொழுது அந்த மகள், "அப்பா, முன்னே செல்லும் நீங்கள் வைக்கும் காலடிகளிலேயே நானும் கால் வைத்து நடக்கிறேன். உங்கள் காலடிகளில் சேறு ஒட்டாதிருக்குமானால், உங்கள் காலடிகளில் கால்வைத்து நடக்கும் என் கால்களில் எப்படி சேறு ஒட்டும்?" என்ற கேட்டாள்.

சாத்தானை வெற்றிகரமாகத் தோற்கடித்த ஒருவரின் காலடிகளை நாம் பின்பற்றி நடந்தால், நமது காலடிகளில் சேறு ஒட்டாமல் காத்துக் கொள்ளலாம். நம் வாழ்க்கையில் சாத்தான் கொண்டுவரும் திட்டங் களையும் முறியடித்து விடலாம்.

வேதாகமத்தில் நமக்கு இருக்கும் நல்ல முன்மாதிரி இயேசுவே! இயேசு தம்முடைய உலக வாழ்க்கையில் ஒவ்வொரு முறையும் சாத்தானைத் தோற்கடித்தார். நாம் இயேசுவின் காலடிகளைப் பின்பற்றி நடந்தால், நாமும் சாத்தானைத் தோற்கடித்து விடமுடியும்.

அ. இயேசு குழந்தையாயிருந்தபோது.....

இயேசு பெத்லகேமில், மாட்டுத் தொழுவத்தில் தேவகுமாரனாய்ப் பிறந்ததைச் சாத்தானால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. இயேசு இவ்வுலகில் பிறந்தவுடனே அவர்மேல் சாத்தான் தனது தாக்குதலைத் தொடர ஆரம்பித்தான். தேவகுமாரனான இயேசு இவ்வுலகில் பெத்லகேமில் பிறப்பதைத் தடுக்க முடியாத சாத்தான், இப்போது அவன் ஏரோது இராஜாவின் மனதிற்குள் புகுந்து இயேசுவை ஒழிக்கத் திட்டமிடச் செய்தான். ஞானிகள் வந்து ஏரோதிடம் "**யூதருக்கு இராஜா வாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?**" என்று விசாரித்ததும், ஏரோது தனக்குப் போட்டியாக ஒரு இராஜா பிறந்திருக்கிறாரா, அவரை வளரவிடக் கூடாது;

கொன்று விட வேண்டும் என்று திட்டமிட்டு, அவரைக் கொலைசெய்ய வகைதேடினான் (மத்.2:16).

யோசேப்பு விரைந்து செயல்படாமல் இருந்திருந்தால் ஏரோதைக் கருவியாகக் கொண்டு இயேசுவை அழிக்க சாத்தான் வகுத்த திட்டம் நிறைவேறியிருக்கும். இயேசு பாலகனைக் காணவந்த ஞானிகள் திரும்ப ஏரோதிடம் வராமல் வேறு வழியாய்த் திரும்பிச் சென்றபின் "கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான். அவன் எழுந்து, இராவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போனான்" (மத்.2:13,14).

சாத்தானை முறியடிக்கும் வழி, தேவனுடைய குரலைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிவதேயாகும். "இங்கே இருப்பது உனக்கு ஆபத்து, உடனடியாக நீ இங்கிருந்து வெளியே சென்றுவிடு" என்று தேவன் கூறுவாரானால் நாம் அதற்கு கீழ்ப்படிந்தால், சாத்தானின் வலையிலிருந்து நாம் தப்பிவிட முடியும். "பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடு" (2 தீமோ. 2:22) என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறும் உபதேசமும் இது போன்றதே. உங்களை ஏராளமான எதிரிகள் சூழ்ந்து கொள்ளும்போதும், எதிரிகளின் ஆயுதங்கள் உங்களைத் தாக்க வரும் போதும், தப்பமுடியாத சூழ்நிலை ஏற்படும்போதும், தேவன் நம்மை விலகிப்போகும்படி கூறுவாரானால் நாம் அதற்குக் கீழ்ப்படிவதே சிறந்த வழியாகும்.

ஆ. வாலிப வயதில் இயேசு

இயேசுவின் வாலிப வயது நிகழ்ச்சிகள் வேதாகமத்தில் இல்லை. தள்ளுபடி ஆகமங்கள் சிலவற்றில் இயேசுவின் வாலிபப்பருவ நிகழ்வுகள் சில குறிப்பிடப்பட்டுள்ளன. அவை நம்பத்தகுந்தவை அல்ல. "எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபி.4:15). இந்த வசனத்தின்படி இயேசுவும், எல்லாவிதத்திலும், எல்லாவகையான சோதனைகளாலும் சோதிக்கப்பட்டார். ஒருவேளை இயேசு தமது வாலிப வயதின் இளமை முறுக்கிலும், சரீரபலத்திலும் பெருமைகொள்ளும்படியாகச் சோதிக்கப் பட்டிருப்பார். தேவனுடைய வார்த்தையைப்பற்றிய அறிவும் ஞானமும் தமக்கு மிகுதியாக இருந்ததைப்பற்றிப் பெருமை கொள்ளும்படி

சோதிக்கப்பட்டிருப்பார். அவரது சரீர வளர்ச்சியில் வாலிப வயதில் தோன்றும் பாலியல் ஆசைகள் தூண்டப்பட்டுச் சோதிக்கப்பட்டிருந் திருக்கலாம். இதுபற்றிய விபரங்கள் எதுவும் வேதாகமத்தில் நமக்கு இல்லை. ஆனால் எந்தெந்தச் சோதனைகளையெல்லாம் சாத்தான் இயேசுவிடம் கொடுத்தானோ, இயேசு அவற்றையெல்லாம் வெற்றி கொண்டு, மேற்கொண்டு "**பாவமில்லாதவராய்**" இருந்தார்(எபி.4:15). இயேசு தம் வாலிப வயதில் சாத்தானின் சோதனைகளை வென்றதற்குக் காரணம், "**இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்**" (லூக். 2:52). இயேசு தம் வாலிபப்பருவத்தில் சரீரவளர்ச்சியில் மட்டுமல்ல, ஆவிக்குரிய அறிவு, ஞானம் இவற்றிலும் வளர்ச்சியடைந்திருந்தார்.

ஆவிக்குரிய நிலையில் நாம் வளர்ச்சியடையாவிடில், நாம் அசையாமல் நின்றுகொண்டிருப்பதில்லை, நாம் பின்னோக்கி நழுவிச்செல்ல ஆரம்பிக்கிறோம். இது நம்முடைய வாழ்வில் எந்நேரமும், எந்நிலையிலும் ஏற்படலாம். ஒரு வாலிபன் அல்லது வாலிபப் பெண் தனது இளவயதில் இப்படி வழிதவறும் வாய்ப்பு அதிகம். இந்த பலவீனமான சந்தர்ப்பங்களைச் சாத்தான் அதிகமாகப் பயன்படுத்திக்கொள்வான் என்பதில் சந்தேகமில்லை. எனவே வாலிப வயது ஆண்களும், பெண்களும் விழிப்புடன் இருந்து தங்கள் சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்.

வாலிப வயதில் சோதனைகளில் விழுந்து ஏற்பட்ட பழக்கங்களாலும், பாவங்களாலும் பயங்கரமான அவதிகளை அனுபவிக்கும் நடுத்தரவயது ஆண்களின், பெண்களின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்குரியதாகும். இந்தப் பாவங்கள் மன்னிக்கப்படலாம். ஆனால் இப்பாவங்களால் ஏற்பட்ட விளைவுகளை அவர்களுடைய ஆயுட்காலம் முழுவதும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் காரியங்களைக் குறித்து இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும். "நான் செய்யும் இந்தக் காரியம் சாத்தானை சந்தோஷப்படுத்துமா? இயேசுவை சந்தோஷப்படுத்துமா?" உங்கள் மனச்சாட்சி உங்களிடம் "**நீ இதைச் செய்தால் சாத்தான் சந்தோஷப்படுவான்; தேவன் துக்கமடைவார்**" என்று உணர்த்தலாம். இது அச்செயலைச் செய்வதற்குக் காட்டப்படும் சிவப்புக்கொடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நீங்கள் சஞ்சலமடையாமல், சபலம் கொள்ளாமல் உறுதியாய் நிற்பதைக் கண்டு சாத்தான் உங்களைவிட்டு ஓடிப்போய் விடுவான்.

இ. ஊழியத்தில் இயேசு

நமது ஆண்டவராகிய இயேசுவின் ஊழியகால ஆரம்பத்தில்தான் சாத்தான் பயங்கரமான சோதனைகளை இயேசுவுக்குக் கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்றபின்னர், இயேசு வனாந்தரமான ஒரு இடத்துக்கு நாற்பது நாட்கள் உபவாசிக்கவும், ஜெபிக்கவும் சென்றார் (மத்.4:1-11; மாற்.1:12,13; லூக்.4:1-13). உபவாசம் இருந்ததால் இயேசுவின் சரீரம் பலவீனமடைந்தபோது, சாத்தான் இயேசுவை விழத் தள்ளிவிடலாம் என்று நம்பி அவரிடம் சென்றான்.

சாத்தான் இயேசுவிடம் சென்று "வனாந்தரமான இந்த இடத்தில், பசியான இவ்வேளையில் உமது தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தி இங்கிருக்கிற கற்களை அப்பமாகச் செய்து சாப்பிடலாம்" என்று யோசனை கூறினான் (மத்.4:1-4). இயேசு இது ஒரு சோதனை என்று அறிந்து வேதவசனங்களை எடுத்துக்கூறி அந்தச் சோதனையை மேற்கொண்டார்.

பின்னர் சாத்தான் **"ஜீவனத்தின் பெருமை"** என்னும் அஸ்திரத்தை இயேசுவின்மேல் எய்தான் (வச.5-7). சாத்தான் இயேசுவை தேவாலயத்தின் ஒரு உப்பரிக்கையின்மேல் கொண்டு சென்று நிறுத்தி விட்டு, இயேசுவிடம் "இயேசுவே, கீழே பாரும், எவ்வளவு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் எவ்வளவு உயரத்தில் இருக்கி றோம். இங்கிருந்து நீர் தாழக்குதித்தால் உம்முடைய பாதங்கள் கல்லில் இடறாதபடிக்கு தேவன் தமது தூதர்களை அனுப்பி, உம்மைத் தாங்கிக் கொள்வார். இது எவ்வளவு பெரிய விந்தைச் செயலாயிருக்கும்! மக்கள் இதைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். உம்மை தேவகுமாரன் என்பார்கள்" என்று சொல்லிப் பார்த்தான். இப்பொழுதும் இயேசு வேத வசனங்களை எடுத்துக்கூறி இச்சோதனையையும் மேற்கொண்டார்.

கடைசியாகச் சாத்தான் இயேசுவிடம் இவ்வுலகத்தின் ராஜ்யங்களை யெல்லாம் காட்டி, "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவ்வுலகமனைத்தையும் உமக்குத் தருவேன்" என்றான். இங்கேயும் இயேசு தேவனுடைய வார்த்தைகளையே எடுத்துக்கூறி சாத்தானின் சோதனையைத் தோற்கடித்தார். பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளில் உயிர் உண்டு. வேறு எந்தப் புத்தகத்துக்கும் இந்த ஆற்றல் இல்லை. "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமை உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் இருக்கிறது" என்று எபிரேயர் 4:12 இல் கூறப்பட்டுள்ளது.

பல தடவைகளில் நாம் தீவிரமாக ஆண்டவருக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது, அந்த சமயம் பார்த்து சாத்தான் நம்மைச் சோதிப்பான். நான் ஊழியத்தில் அதிகமாக ஈடுபடும்போது அதிகமாகக் களைப்படைகிறேன். அந்தச் சோர்வு நேரங்களில் சாத்தான் என்னை அதிகமாகச் சோதிப்பதுண்டு. நான் அதிகமாகப் பின்வாங்கிப்போய் சோர்வின் எல்லையில் இருக்கும் நேரங்களில் சோதனைகள் வரும். இத்தகைய நேரங்களில் நான் அதிக விழிப்புடன் இருந்து சாத்தானுடைய சோதனைகளை மேற்கொள்ள வேண்டும். சாதாரணமாக நாம் ஜெபித்து, உபவாசித்து, மற்றவர்களுக்காக ஊழியம் செய்துகொண்டிருக்கும் வேளைகளில் இத்தகைய சோதனைகளை நாம் எதிர்பார்க்கமாட்டோம். நாம் அதிர்ச்சியும் ஆச்சரியமும் கொள்ளத்தக்கவிதத்தில் சோதனைகள் திடீரென்று வரும். நாம் விழிப்புடன் இல்லாவிடில் சாத்தான் நம்மை விழத்தள்ளி விடுவான். இந்த வீழ்ச்சி நம்மை அறியாமலே, என்ன நடக்கிறதென்று நாம் உணருமுன்னமே நடந்துவிடும். எனவே நாம் விழிப்புடனும், கவனத்துடனும், எதிர்பார்ப்புடனும் நடந்துசெல்ல வேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் நம்முடைய பலவீனங்களை உணர்ந்து நம்மை வீழ்ச்சியடையச் செய்யும் வஞ்சக சர்ப்பமாகிய சாத்தானைத் தோல்வியடையச் செய்ய நாம் இயேசு கையாண்ட முறையைப் பின்பற்ற வேண்டும். தேவனுடைய வார்த்தையாகிய பட்டயத்தைப் பயன்படுத்த வேண்டும். நம் வாழ்வில் ஏற்படும் எல்லாப் பிரச்சனைகளையும், அறைகூவல்களையும் வேதவசனங்களைக் கொண்டு முறியடிப்போமானால், சாத்தானின் சோதனைகள் நமக்கு ஆச்சரியத்தைத் தராது. ஆனால் வேதவசனங்களை நாம் மனப்பாடம் செய்யாவிட்டால் அவற்றை ஏற்ற சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற முடியாது. எனவேதான் எப்போதும் நாம் முத்தான வேதவசனங்களை மனப்பாடம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். வேதவசனங்களை மனப்பாடம் செய்வதை விட்டுவிடாதீர்கள். சாத்தானால் வேதவசனங்களை எடுத்துக்கூற முடியுமானால், உங்களுக்கு எவ்வளவு அதிகமாகத் தெரிந்திருக்கவேண்டும்?!

வேதவசனங்களை அதிகமாக உங்கள் மனதில் சேமித்து, நிறுத்தி வைத்துக்கொள்ளுதல், நீங்கள் சோதனைக்கு உட்படுவதை அது தடை செய்யும். பாவம் செய்யாமல் இருக்க வேதவசனங்களை எடுத்துக் கூறுவது மட்டுமல்ல, நீங்கள் வசனங்களை மனப்பாடம் செய்யும்போது வசனத்தோடு தேவனையும் உங்கள் உள்ளத்தில் நிரப்பிக் கொள்ளுகிறீர்கள்.

தேவன் இருக்குமிடத்தில் சாத்தானுக்கு இடமேது?

வேதவசனங்களை வாசியுங்கள். வாசித்த வசனங்களைத் தியானியுங்கள். வசனங்களை மனப்பாடம் செய்யுங்கள். சாத்தானைத் துரத்த வேதவசனம் தேவைப்படும்போது அது ஆவியின் பட்டயமாக உங்களுக்கு உதவும்.

ஈ. தமது நண்பர்களுடன் இயேசு

ஒருவேளை சாத்தான் முன்வாசல் வழியாக வந்து நம்மை நேரடியாகத் தாக்க முடியாவிட்டால் அவன் பக்க வழியாக, அதாவது நமது உறவினர்கள், நண்பர்கள் மூலமாக வந்து நம்மைத் தாக்குவான்.

மத்தேயு 16:22,23 வசனங்களில் "பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்". அதாவது இயேசு எருசலேமுக்குப் போகவேண்டாம், எருசலேமில் தங்கவேண்டாம் என்பது அவனது ஆலோசனையாயிருந்தது. ஆனால் தேவனுடைய சித்தம் நிறைவேற இது தடையாயிருந்தது. இது சாத்தானுடைய தூண்டுதல் என்று உணர்ந்த இயேசு, பேதுருவைப் பார்த்து: "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்" (மத்.16:22,23).

இயேசு, சாத்தான் எந்த ரூபத்தில் வந்து தன்னைத் தாக்கினான் என்பதை எளிதில் கண்டுபிடித்து விட்டார். பாருங்கள்! பேதுருவின் உள்ளத்தில் இந்தச் சிந்தனைகளைத் தோற்றுவித்தது யார்? என்று இயேசு அறிந்திருந்தார். இதற்கு இயேசு நேராகப் பேதுருவைக் கண்டிக்காமல், அவனுக்குப் பின்னாக மறைந்து இருந்துகொண்டு அவனைத் தூண்டி விட்டுக்கொண்டிருக்கும் சாத்தானை நேரடியாகக் கண்டனம் செய்கிறார். நமக்கும் இது ஒரு நல்ல பாடமாகும். நம்மைச் சோதிப்பதற்குச் சாத்தான் நம்முடைய ஒரு உறவினரையோ, நண்பரையோ பயன்படுத்தலாம். எனவே உங்கள் நண்பரையோ, உறவினரையோ கண்டனம் செய்யாதீர்கள். அவர்கள் மீது கோபம்கொண்டு சாடாதீர்கள். உங்களுடைய உண்மையான எதிரியிடம் நேரடியாக மோதுங்கள்.

சாத்தான் நம்முடைய நண்பர்களையும், குடும்பத்தாரையும் நமக்கு எதிராகத் தூண்டிவிடும் பழக்கம் உள்ளவன். நம்மிடம் யோசனையாக ஒருவர் கூறும் அனைத்தும் பொருத்தமானதா? சரியானதா? என்பதை நாம் பகுத்தறிய, கர்த்தருடைய வேதவசனங்களின் அறிவு நமக்குத் தெளிவாக இருக்கவேண்டும். நம்மீது கரிசனை கொள்ளுகிறவர்களின்

விருப்பங்கள், தேவனுடைய சித்தத்துக்கு இசைவானதா என்பதை வேதாகமத்தில் ஒப்பிட்டுப் பார்த்து நாம் கண்டுபிடிக்கலாம். அவைகள் அப்படி இல்லாவிட்டால், தேவன் பொய்யுரையாதவர். தேவன் கூறுகிற அனைத்தும் உண்மை. ஆனால் உலகில் உள்ள மக்கள், சத்தியம் எதுவென்றும், பொய்யானது எதுவென்றும் கண்டுகொள்ள முடியாதவர் களாக இருக்கிறார்கள். **"தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்லுவோமாக" (ரோம.3:4).**

உ. தம் பகைவர்களுடன் இயேசு

நம்முடைய எதிரிகளும், பகைவர்களும் ஆலோசனையாகக் கூறுபவை தேவனுடைய சித்தத்துக்கு எதிராக இருக்கும் என்று நாம் கருதுவதுண்டு. ஆனால் அது எப்போதும் உண்மையல்ல. சிலவேளை களில் நம்முடைய குறைகளை எடுத்துக்கூறவும், சுட்டிக்காட்டவும் தேவன் நமது பகைவர்களைப் பயன்படுத்துகிறார். நம்முடைய நண்பர்கள் நம்மீது கொண்டுள்ள அன்பு, பற்று ஆகியவை காரணமாக நம் குறைகளை அறிந்திருந்தும் சுட்டிக்காட்ட முன் வரமாட்டார்கள், அவர்கள் தயங்குவார்கள். பெஞ்சமின் ப்ராங்களின் என்பவர் **"உங்கள் குறைகளை உங்கள் நண்பர்கள் எடுத்துக்கூறுவதால் அவர்களை நேசியுங்கள். அவர்களிடம் அன்புகூருங்கள்"** என்று கூறியுள்ளார்.

அதேவேளையில் சாத்தான் உங்கள் நண்பர்களைப் பயன்படுத்தி உங்களைப் பாவம் செய்யவும் தூண்டிவிடுவான். இயேசுவின் பகைவர்கள்மூலம் பலதடவைகள் இயேசுவின் ஊழியகாலத்தில் அவரைத் தாக்க சாத்தான் முயற்சித்தான். மாற்கு 10:2 இல் பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து **"ஒரு மனிதன் தன் மனைவியை விவாகரத்து செய்வது சரியா?"** என்று கேட்டார்கள். இயேசுவைப் பாவம் செய்யத் தூண்டும் நோக்கத்தில் அவர்கள் இப்படிக் கேட்டார்கள்.

ஒருதடவை சாத்தான் வேதபாரகர்களைப் பயன்படுத்தினான். அவர்கள் ஒரு ஸ்திரீயை விபசாரத்தில் கையும் களவுமாகப் பிடித்து இயேசுவின் முன் கொண்டு வந்து நிறுத்தி அவளைக் கல்லெறிந்து கொல்லலாமா? என்று கேட்டார்கள் (யோவா.8:5). இயேசு நம்மைப் பலப்படுத்துவதற்காக சோதனைகளை (Test) பயன்படுத்துகிறார். ஆனால் நம்மைப் பாவத்தில் விழச்செய்வதற்காகச் சாத்தான் அவற்றைப் பயன்படுத்துகிறான்.

இயேசு சாத்தானைத் தோற்கடித்தார். அவர் வேதவசனங்களை அடிப்படை ஆதாரமாகக் கொள்ள நினைத்தார். அதனால் அக்காலத்

திலுள்ள சமயத்தலைவர்களின் பகை ஏற்பட்டாலும் கவலையில்லை என்று நினைத்தார். வேதவசனங்களின் அடிப்படையில் சரியானது எதுவோ அதை இயேசு துணிச்சலுடன் செய்தார். வேறு அனைவரும் தவறானவற்றையே செய்துகொண்டிருந்தாலும், நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும்.

ஊ. இயேசுவைப் பின்பற்ற - ஒரு அறைகூவல்

இயேசுவின் முன்மாதிரிகளை நாம் பின்பற்ற ஆயத்தமாயிருந்தால் அவை அற்புதமானவைகளே. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சாத்தானைத் தோற்கடிக்க வேண்டுமானால், இயேசு செய்தவற்றையே பின்பற்றுங்கள். சோதனையை எப்பொழுது எதிர்த்து மேற்கொள்ள வேண்டும், எப்பொழுது அதை விட்டோடிப் போய்விடவேண்டும் என்பதைக் குறித்ததானத் தேவனுடைய போதனைகளைக் கேளுங்கள். "நான் இந்தக் காரியத்தைச் செய்வது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா? அல்லது சாத்தானுக்குப் பிரியமாய் இருக்குமா?" இவ்வாறு சரியான கேள்விகளைக் கேட்கக் கற்றுக்கொள்ளுங்கள். மிக முக்கியமான காரியம் என்னவெனில், **எப்போதும் நிரந்தரமாக தேவனுடைய வார்த்தைகளை உங்கள் இருதயங்களில் மறைத்து வையுங்கள்.** நீங்கள் இயேசுவின் காலடிகளைப் பின்பற்றி நடக்கும்போது நீங்கள் சாத்தானின் சேற்றையும், சகதியையும் மிதிப்பதில்லை. உங்கள் சரீரமும், வஸ்திரமும் அழுக்கடைவதுமில்லை, கறைப்படுவதுமில்லை.

கர்த்தருடைய வசனத்தை எந்தவயதில் நாம் மனதில் பதித்து கொள்ள ஆரம்பிக்க வேண்டும்? வாலிபப் பிள்ளைகள் வசனங்களை கற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு மிகவும் சிறியவர்களல்ல. மிகச் சிறுவயதிலேயே, வசனங்களை அவர்கள் உள்ளங்களில் பதியச் செய்ய முடியும். 13 முதல் 20 வயது வரையுள்ள வாலிபப் பிள்ளைகளுக்கு இன்று வசனங்களில் அதிக நாட்டம் இல்லை. நடுத்தர வயது மனிதர்களும், பெண்களும் வசனம் படிக்க முடியாதபடி அதிக வயது சென்றுவிடவுமில்லை, முதிர்ச்சி அடைந்துவிடவும் இல்லை. எனவே நாம் அனைவருமே வசனங்களை மனப்பாடம் செய்வதன் மூலம் நன்மை பெற முடியும்.

5 அங்குல நீளமும் 3 அங்குலம் அகலமும் கொண்ட அட்டைகளை வெட்டி வைத்துக்கொள்ளுங்கள். அவற்றில் நீங்கள் மனப்பாடம் செய்யவேண்டிய வசனங்களை எழுதுங்கள். அவற்றைக் கையில் வைத்துக்கொண்டு திரும்பத்திரும்ப அவற்றை வாசியுங்கள். அவை

விரைவில் உங்கள் மனதில் பதிந்துவிடும். விமானத்தில் பறந்து கொண்டிருக்கும்போது வசனம் படிக்கலாம். பேருந்திற்காக ஒரு நிறுத்தத்தில் காத்திருக்கும்போது வசனம் படிக்கலாம். உங்கள் அலுவலக சாப்பாட்டு இடைவேளையின் போது படிக்கலாம். எந்த இடத்திலும் 5 அல்லது 10 நிமிடம் இடைவெளி கிடைத்தாலும் இந்த வசன அட்டைகள் நம்மை வசனங்களைப் படிக்கத் தூண்டும். இது மிகவும் சுலபமானதாகும். இது படிக்கப் படிக்க இன்பம் தருவதும் மிகவும் நன்மைத் தரக்கூடியதுமாகும். சங்கீதம் 119:11 ஐ முதல் ஆரம்பமாகக் கொண்டு படிக்கத் தொடங்குங்கள். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்". இந்த வசனம் நீங்கள் மேலும் மேலும் புதுப்புது வசனங்களைப் படிக்க உங்களுக்கு உற்சாகம் தரும்.

நீங்கள் வசனம் படிக்க ஆரம்பிக்க இதுவே நல்ல தருணம். சாத்தானைத் தோற்கடிக்கும் முயற்சியில் முன்ஆயத்தம் மிகவும் முக்கியமானது. சாத்தானை எதிர்ப்பதில் முன்ஆயத்தம் செய்வதன் முக்கியத்துவத்தைத்தான் அடுத்த அத்தியாயத்தில் பார்க்கப் போகிறோம்.

சாத்தானை எதிர்ப்பதற்குப் போதுமான முன்ஆயத்தங்களைச் செய்யுங்கள்!

ஒரு இளைஞன் தான் வசிக்கும் இடத்திலிருந்து வெகுதூரத்திலிருந்த அலாஸ்காவின் அழகான இயற்கைச் சூழலை ஆராய்ந்து படிக்க விரும்பினான். அங்கு செல்வதற்கு விமானப்பயணத்துக்கு ஆயத்தமானான். அவன் நூற்றுக்கணக்கான போட்டோ படச்சுருள்களை (Film) வாங்கினான். கூடாரம் அடித்துத் தங்குவதற்குத் தேவையான பொருட்களை வாங்கிச் சேர்த்தான். அவன் தங்கியிருக்க வேண்டிய நாட்களுக்குத் தேவையான உணவுக்கு ஒழுங்கு செய்தான். அவன் சென்று அங்கு செலவிட்ட ஆரம்ப வாரங்களில் மனிதனின் கைபடாத இயற்கையை நன்கு ரசித்தான், சந்தோஷமடைந்தான், அதிசயம் கொண்டான். அவன் தங்கும் காலம் முடிந்து திரும்பத் தன் ஊருக்குப் புறப்படும்வேளை வந்தது. அந்த நாளும் கடந்துசென்றது. அவனுடைய நாட்குறிப்பேட்டில் அவன் செய்யவேண்டிய முன்ஆயத்தங்கள் குறித்த சில சந்தேகங்கள் இருந்தன. குறிப்பிட்ட காலத்தில் இவன் திரும்பி வராததால் மற்றவர்கள் இவனைத் தேடினார்கள். காலம் கடந்து விட்டது. அந்த வாலிபன் திரும்பிச்செல்வதற்கு தனக்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் சரியாகச் செய்யாததாலும் அந்தப் புதிய இடத்தில் அவனுக்குத் தேவையானவை கிடைக்காததாலும் அங்கேயே இறந்து விட்டான். முக்கியமான, அவசியமான சில பொருட்களை அவன் கொண்டு சென்றிருக்கவில்லை. இந்த ஆயத்தக்குறைவே அவனது மரணத்துக்குக் காரணமானது.

துரதிர்ஷடவசமாகப் பல கிறிஸ்தவர்கள் இந்த இளைஞனைப் போலிருக்கிறார்கள். சாத்தானைத் தோற்கடிப்பதற்குச் செய்யவேண்டிய முன்ஆயத்தங்களை அவர்கள் சரிவரச் செய்வதில்லை. அவர்கள் பள்ளியிலும், கல்லூரியிலும் உள்ள தேர்வுகளுக்காக ஆயத்தம் செய்வார்கள். நடக்கப்போகும் ஒரு விளையாட்டுப் போட்டிக்காகத் தங்களை நன்கு தயார் செய்வார்கள். தங்கள் பணி ஓய்வுக்கு முன் அது

குறித்த சில கருத்தரங்குகளில் கவனமுடன் கலந்துகொள்வார்கள். ஆனால் சாத்தானோடு போரிட்டு அவனைத் தோற்கடிக்க வேண்டும், அதற்காக தகுந்த ஆயத்தங்களைச் செய்யுங்கள் என்று கூறும்போது மக்கள் அதில் அதிக ஆர்வமும், உற்சாகமும் காட்டுவதில்லை.

நெப்ராஸ்கா பல்கலைக்கழகத்தின் கால்பந்துக் கழகத்தில் பயிற்சியளிக்கும் ஆசிரியர்கள் பளு தூக்கும் அறையிலும், பயிற்சிக்களத்திலும் தான் விளையாட்டுப்போட்டிகளின் வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது என்று கூறுகின்றனர். இங்குதான் போட்டிக்கான முன்ஆயத்தம் செய்யப்படுகின்றது. எனவேதான் நெப்ராஸ்காவில் களத்தில் நெற்கதிரை அடிப்பவர்கள்தான் கால்பந்து மைதானத்தில் ஆற்றல் மிகுந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் விளையாட நல்ல ஆயத்தத்துடன் வருகிறார்கள். வெற்றி பெறுவது அவர்களது இலட்சியம். எனவே போட்டி தொடங்குவதற்கு முன் அதற்காகச் செய்யப்படும் ஆயத்தத்தைப் பொறுத்தே வெற்றி தோல்வி அமையும். நாம் நம்முடைய எதிராளியைத் தோற்கடிக்க வேண்டுமானால், நாம் சாத்தானுடன் போராடி ஜெயிக்கவேண்டும் என்னும் எண்ணத்துடனும், நல்ல ஆயத்தத்துடனும் வரவேண்டும். நாம் சாத்தானை வெற்றி கொள்வது எப்படி என்பதைக் காட்ட இதோ சில வழிமுறைகளைக் கூறுகின்றேன்.

அ. கிறிஸ்துவோடு நெருங்கிய தொடர்பை வைத்துக்கொள்ளுங்கள்.

போதகரும், ஆலோசனை வழங்குபவருமாயிருந்த **வால்ட்டர் ட்ரோபிஷ்** என்பவர், அவர் ஊழியம் செய்த ஒரு ஆப்பிரிக்கத் தலைவரைக் குறித்து இவ்வாறு கூறினார்: அந்தத் தலைவரின் பெயர் **ரே பௌபா.** அவன் ஆறரை அடி உயரமும், கவர்ச்சியான தோற்றமும் உள்ளவன். அவன் பெரும்பாலும் தன் அரண்மனையை விட்டு வெளியே செல்லுவதில்லை. அவனது ஆளுகைக்குட்பட்ட மக்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் தலைவரைக் கண்டதில்லை. அவனைச் சுற்றிலும் இருந்த எண்ணற்ற காவலாளிகளைக் கடந்துசென்று அவர்கள் தங்களது தலைவரைக் கண்டுபேசவும், சந்திக்கவும் முடிவதில்லை. ஒருவேளை அவனை சந்திப்பதற்கு இந்தத் தடைகள் எல்லாவற்றையும் கடந்து சென்றாலும் அங்கே ஒரு இருள் நிறைந்த அறையில், சிங்காசனத்தில் தன் உடல் முழுவதையும் தலையையும், வெள்ளைத் துணியால் மூடிக்கொண்டு, தன் கண்களைமட்டும் வெளியே காட்டுபவனாக அந்த தலைவன் காட்சியளிப்பான் என்று **ட்ரோபிஷ்** போதகர் எழுதியுள்ளார்.

இந்தத் தலைவர்களையும், இயேசுவையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நாம் வணங்கும், ஆராதிக்கும் இயேசு, தம்மிடத்தில் வர, எவருக்கும் எந்தச் சிரமத்தையும் கொடுப்பதில்லை. அவர் அனைவரையும், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.11:28) என்று அழைக்கிறார். தம்முடைய மக்களிடத்திலிருந்து தூரவிலகி, கிட்டச்சேர முடியாமல் தனியாக இருப்பவர் அல்ல. ஏசாயா தீர்க்கதரிசி அவரது பிறப்பைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார், "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசா.7:14). "இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத்.1:23). இயேசுவும், "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்" (மத்.28:20). இவைகளெல்லாம் இயேசு நமக்கு எட்டாத தூரத்தில் இருக்கும் கடவுள் அல்ல என்பதைக் காட்டுகின்றன அல்லவா? கிறிஸ்துவின் வாசல் எப்போதும் திறந்திருக்கிறது. வரவேற்கும் வாசல் திரை எப்போதும் காத்திருக்கிறது. நாம் எல்லோரும் எப்போதும் அவருக்கு முன்பாக, அவருடைய சமுகத்தில் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களுடன் கிறிஸ்து நெருங்கிய உறவுகொள்ள விரும்புகிறார். இயேசு தம்முடன் வந்த சீஷர்களிடம் எப்போதும் "**என்னைப் பின்பற்றி வாருங்கள். என்னுடன் வந்து ஜெபம்பண்ணுங்கள். என்னுடன் வந்து போஜனம் பண்ணுங்கள். நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?**" என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்.

உண்மையில் இயேசு தமது சரீரமாம் திருச்சபையிடம் பேசுகிறார்: "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி.3:20) என்றார் இயேசு. இந்த அழைப்புக்கு நமது பதில் சங்கீதக்காரனாகிய தாவீதின் பதிலைப்போல இருக்கவேண்டும். "என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று" (சங்.27:8). "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" (சங்.42:1).

அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகக் கூறுகிறார்: "நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்...." (பிலி.3:9,10).

இவர்களைப்போல கிறிஸ்து நமக்குள் நிறைந்திருப்பாரானால், நம்முடைய வாழ்க்கையில் நம்மைச் சோதிக்கவும், நம்மில் கிரியை செய்யவும் சாத்தானுக்கு இடமில்லாமல் போகும். "இப்போதும் நீங்கள் உங்கள் இருதயத்தையும், உங்கள் ஆத்துமத்தையும், உங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்குங்கள்" (1நாளா.22:19).

ஆ. உங்கள் பலம் குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்

"ஒரு படை தன் வயிற்றினால் நகர்ந்து முன்னேறுகிறது" என்று சொல்லப்படுவதுண்டு. இதன் பொருள் என்னவென்றால், போர் வீரர்கள் தைரியமாகப் போரிட்டு வெற்றி பெறுவதற்குத் தேவையான பலத்தை அவர்கள் சாப்பிடும் உணவு அவர்களுக்குக் கொடுக்கிறது என்பதே.

ஆவிக்குரிய விஷயத்திலும் இது உண்மையே. நமக்கு ஆவிக்குரிய உணவு தேவை என்பதை தேவன் அறிவார். எனவே அவர்களுக்கு ஜீவ வசனமாகிய அப்பத்தைத் தந்திருக்கிறார். யோவான் 6 ஆம் அதிகாரத்தில் இயேசு இரண்டு தடவை "**ஜீவ அப்பம் நானே**" என்று கூறியிருக்கிறார் (யோவா.6:35,48). இந்த அப்பத்தில் நாம் எப்படிப் பங்குகொள்கிறோம்?. வேதத்தை வாசிப்பதினாலும், ஆராய்ந்து படிப்பதினாலும், வசனங்களை மனப்பாடம் செய்வதினாலும் நாம் இந்த அப்பத்தைப் புசிக்கிறோம். வேதவசனங்கள் "**ஞானப்பால்**" என்றும், "**மாம்சம்**" என்றும் அழைக்கப்படுகிறது (1பேது.2:3, 1கொரி.3:2, எபி.5:12,14). இவ்விதமான சத்து நிறைந்த உணவு நமக்கிருக்கிறபடியால், நாம் நல்ல சத்துள்ள உணவு நமக்குப் பெலன் தரவில்லை என்று கூற முடியாது.

நாம் தினமும் இந்த ஞானப்பாலை அருந்தி வந்தால் அது நமக்கு **ஆவிக்குரிய ஊட்டச்சத்தாக(VITAMIN)** அல்ல, நமக்குத் தேவையான **அனுதின உணவாக** அமையும். ஊட்டச்சத்து என்பது நமது அனுதின, சாதாரண உணவுடன், கூடுதலான சத்தைப் பெற எடுத்துக்கொள்ள வேண்டிய உணவாகும். இது தினசரி உணவுக்கு ஒரு மாற்று அல்ல. **வேதவசனம் என்னும் அனுதின மன்னாவிற்கு மாற்று ஏதும் இல்லை.** சாத்தானை நாம் ஜெயிக்க வேண்டுமானால், நமக்கு இந்த உணவு அனுதினமும் தேவை. பல பின்வாங்கிப்போன, தோல்வியடைந்த கிறிஸ்தவர்கள் வேத

வசனத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. நீங்கள் நல்ல உணவைத் தினமும் சாப்பிடாவிட்டால், நீங்கள் போராட்டம் நடத்த முடியாது. நீங்கள் நேற்று உட்கொண்ட உணவு இன்றைக்குப் பயன் தராது. நீங்கள் இன்றைக்குத் தேவையான உணவை இன்று உட்கொள்ள வேண்டும். எனவேதான் தினமும் தவறாமல் தேவவார்த்தைகளை நாம் வாசித்துப் படித்துப் பயன்பெறவேண்டும் என்று கூறப்படுகிறது. நீங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வேதம் வாசித்துத் தியானித்துப் பயன்பெற்றது அன்றையத் தினத்துக்கு நன்றாயிருந்தது. அது இந்த வாரம் முழுவதற்கும் போதுமானதல்ல. அன்று பெற்ற சக்தியைக் கொண்டு வாரநாட்கள் முழுவதும் நீங்கள் செயல்பட முடியாது. உங்களுக்கு திங்கள், செவ்வாய், புதன் .... என ஒவ்வொருநாளும் உணவு தேவை.

வேதபண்டிதர் **தியோடர் எப்** இளம் போதகராய் இருந்தபோது, இப்படியாக சிந்தித்தார்: "ஞாயிற்றுக்கிழமைமட்டும் உணவருந்தினால் போதும் என்று எவரும் நினைக்கமாட்டார்கள். அதேபோல விசுவாசிகள் ஞாயிற்றுக்கிழமை பெறும் ஆவிக்குரிய போஜனம் அந்த வாரம் முழுவதற்கும் அவர்களுக்குப் போதாது. அவர்களுக்குத் திங்கள்கிழமை முதல் வெள்ளிக்கிழமைவரை தினமும் இந்த உணவு தேவை" எனக் கருதி வானொலியில் அனுதின வேதபாட போதனை நிகழ்ச்சி ஒன்றை ஆரம்பித்தார். அதற்கு **"வேதாகமத்திற்கு திரும்புக"** என்று பெயர் சூட்டினார்.

உங்கள் அன்றாடக வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை இடம் பெறச் செய்யுங்கள். நாம் வேதாகம உண்மைகளை ரசித்து, ருசிக்கும் போது, நமக்குச் சாத்தானை ஜெயிக்கத் தேவையான பலம் கிடைக்கும். சாகும்வரை பட்டினி கிடக்கும் ஒருவன் போருக்குப் போவதைப் பற்றிச் சிந்திக்கமுடியுமா? நாட்கணக்காக, வாரக்கணக்காக வேதாகமத்தை வாசிக்காமல் விட்டுவிட்டுச் சில கிறிஸ்தவர்கள் சாத்தானுடன் போர் புரிவோம் வாருங்கள் என்று எப்படி சொல்லமுடியும்?

இ. விடாமல் தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள்

பல கிறிஸ்தவர்கள் ஒரு நெருக்கடி வரும்போதுதான் **'ஜெபம்'** செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். நாம் ஜெபத்தின் மூலமாக நமது தலைமைத் தளபதியிடம் தொடர்பு வைத்துக்கொண்டிருத்தல் மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல உதவிகளும் ஆலோசனைகளும் அவரிடமிருந்து நமக்குக் கிடைக்கும். உதாரணமாக நம்முடைய

கால்களின் அடியில் சாத்தான் விரித்து வைக்கும் அநேக பொறிகள், கண்ணிகள் ஆகியவற்றை நாம் தவிர்க்கவும், அவைகளிலிருந்துத் தப்பிக்கொள்ளவும் ஜெபம் நமக்கு உதவிசெய்கிறது. சங்கீதக்காரன் களிகூர்ந்து மகிழ்ச்சியுடன் சொல்வதைக் கேளுங்கள். "வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப் போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்" (சங்.124:7). இதே மகிழ்ச்சியை நாமும் அனுபவிக்கலாம். எப்போது? ஆண்டவருடன் ஜெபத்தின் மூலம் அனுதினமும் தொடர்பு கொண்டு, அவர் காட்டும் வழியில் நடக்கும்போது அனுபவிக்கமுடியும்.

மேலும் ஆண்டவரோடு இடைவிடாமல் தொடர்பு கொண்டிருப்ப தால், நெருக்கடி நேரங்களில் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்னும் அனுபவம் நமக்குக் கிடைக்கும். நெருக்கடிகள் தோன்றும் போது, ஜெபம் நமக்கு அறிமுகமான ஒரு நண்பனாக இருக்கும். அப்போது அது ஒரு சமயச் சடங்காச்சாரமாகத் தோன்றாது.

ஒருதடவை ஒரு உள்நாட்டுப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஒரு இளம் போர்வீரன் அதிகாலைவேளையில் தன்னுடைய கூடாரத்துக்குள் நுழைந்தான். போர்க்களத்திலிருந்து இவனைக் கவனித்த சக வீரர்கள் சந்தேகித்து, இவன் தங்கள் எதிரிப்படைகளுக்குத் தகவல்களை அனுப்பினான் என்று குற்றஞ்சாட்டித் தங்கள் தலைமைத் தளபதியின் முன் அவனைக் கொண்டுசென்று நிறுத்தினார்கள். ஆனால் அந்த இளம்வீரன் தன் சக வீரர்களை விட்டுவிட்டுத் தனியாக தன் கூடாரத்துக்குச் சென்று அவசரமாக ஆண்டவரிடம் ஜெபிப்பதற்காக வந்ததாகக் கூறினான். இதைக் கேட்ட தளபதி, "நல்லது. இளம்வீரனே, உனக்கு ஜெபம்பண்ணத் தெரியுமானால், இங்கே, இப்போதே ஜெபம் பண்ணு பார்க்கலாம்" என்றார். உடனே அந்த வீரன் அங்கேயே முழங்காற்படியிட்டுக் கண்ணீருடன் ஆண்டவரிடம் ஜெபித்தான். தனது படைக்காகவும், தளபதிக்காகவும், நாட்டுக்காகவும்கூட ஜெபித்தான். அவன் ஜெபம் முடிந்து எழுந்ததும், படைத்தளபதி "சரி, நீ போகலாம், உன்மேல் ஒரு குற்றமும் இல்லை. நீ கூறியதை நம்புகிறேன். தினமும் இப்படி ஜெபித்துப் பழகியதால்தான் இங்கு இவ்வாறு உன்னால் ஜெபிக்க முடிந்தது" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

நெருக்கடியின் மத்தியில் நாம் ஆண்டவரிடம் ஜெபிக்கத் தெரியாத கத்துக்குட்டியைப் போல வரவேண்டாம். அமைதியாயிருக்கும் வேளை யில் நாம் நன்கு ஜெபித்துப் பழக வேண்டும். அப்பொழுதுதான்

நெருக்கடி வேளையில் நாம் தேர்ச்சியடைந்த அனுபவசாலியைப் போல ஜெபிக்க முடியும்.

ஈ. விழிப்புடன் இருங்கள்

அமெரிக்கப் புரட்சியின் போது, பிரிட்டிஷ் படைகளின் தலைமைத் தளபதியாய் நியூ ஜெர்ஸி மாநிலத்தில் டிரெண்டனில் இருந்த **ரால்** என்னும் தலைவர் நண்பர்களுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு தூதுவன் ஒரு அவசரச் செய்தியைக் கொண்டு வந்து தளபதியிடம் கொடுத்தான். அவர் அதை வாங்கி உடனே படிக்காமல் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு தொடர்ந்து சீட்டு விளையாடினார். அச்செய்தி என்னவெனில், இவர்களைத் தாக்க **ஜார்ஜ் வாஷிங்டன்** தனது படையுடன் டெலாவெயர் நதியைக் கடந்து வந்து கொண்டிருக்கிறார் என்பதே. சீட்டு விளையாடி முடிந்தபின் **ரால்** என்ற அந்த தலைவர் அக்கடிதத்தைப் படித்தார். அதிர்ச்சியடைந்தார். உடனடியாகத் தன் படைவீரர்களை எழுப்பித் திரட்டி தாக்குதலைச் சமாளிக்க முன்னேறிச் சென்றார். ஆனால் அவர் செய்த காலதாமதம் அவருக்குப் பெரும் பாதகமாய் அமைந்துவிட்டது. அவரும் அவருடைய படைவீரர்களில் பலரும் கொல்லப்பட்டனர். மீதிப்படையினர் சிறைபிடிக்கப்பட்டனர். இந்த மாபெரும் தோல்விக்கும், இழப்புக்கும் காரணம் என்ன? படைத் தளபதி ரால் விழிப்புடன் இராததன்றோ?

"இன்று அநேக கிறிஸ்தவர்கள் இதே சூழ்நிலையில்தான் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையையே சீரழிக்கக்கூடிய பயங்கரமான எதிரியுடன் போராடிக் கொண்டிருப்பதை உணராமல் முற்றிலும் மறந்தவர் களாய்க் காணப்படுகிறார்கள்.

பேதுரு அப்போஸ்தலன் இதற்காகவே இப்படியான ஒரு எச்சரிப்பைத் தருகிறார். **"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்" (1பேது.5:8).**

இந்த உலக இன்பங்கள் இன்று கிறிஸ்தவர்களைத் தாலாட்டித் தூங்க வைத்திருக்கின்றன. இவர்கள் தங்களுக்கு வரவிருக்கும் அபாயத்தை அறியவில்லை. இவர்கள்தான் பிசாசானவனுக்கு இரையாகப் போகிற வர்கள். இயேசு தமது சீஷர்களுக்கு "நீங்கள் சோதனைக்குட்படாத படிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான்,

மாம்சமோ பலவீனமுள்ளது"(மத்.26:41) என்று எச்சரிக்கைக் கொடுத்தார். அதாவது, "விழிப்புடன் இருங்கள். உயிருடன் வாழ்பவர்களாயிருங்கள்" (தூங்காதேயுங்கள்). நீங்கள் விழிப்புடன் இராத வேளைகளில் சாத்தான் உங்களைச் சுலபமாகக் கவிழ்த்து விடுவான். உங்கள் கண்கள் சோர்ந்து மூடுவதை விழிப்புடன் இருக்கும் சாத்தான் கவனித்து விடுகிறான். அந்த அரை மயக்க வேளையில் அவன் வந்து உங்களைச் சோதித்து வீழ்ச்சியடையச் செய்துவிடுவான். நீங்கள் ஒன்றிரண்டு தடவை கொட்டாவி விடுவதைச் சாத்தான் பார்த்துவிட்டால், தனக்கு வாசல் திறந்திருக்கிறது என்று அறிந்து உங்களுக்குள் நுழைந்து விடுவான். விழிப்புடன் இருப்போர் வெற்றி பெறுவார்கள். சாத்தானை எதிர்க்க நீங்கள் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

உ. தாமதம் செய்யாதீர்கள்

1985 செப்டம்பரில் போட்டோ காமெரா பொருத்தப்பட்ட ஒரு தனி நீர் மூழ்கிக் கப்பல் அட்லாண்டிக் சமுத்திரத்தில் 13120 அடி ஆழத்தில் அமிழ்ந்து கிடக்கும் டைட்டானிக் கப்பலின் எஞ்சிய பாகங்களைப் பரிசோதித்துப் புகைப்படம் எடுத்துக் கொண்டு வந்தது. டைட்டானிக் கப்பல் இயங்கிய காலத்தில் அதுவே உலகத்தில் உள்ள கப்பல்களில் எல்லாம் மிகப் பெரியதாயும், 882½ அடி நீளமும், 46328 டன் எடையும் கொண்டது. அக்கப்பலுக்கு மூன்று நங்கூரங்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் 10 டன் வீதம் எடை கொண்டவை. அக்கப்பலில் 400 பேர் பணியாளர்களாய் இருந்தனர். அக்கப்பலில் உள்ள உணவு விடுதிகளில் 518 பேர் பணியாற்றினர். அக்கப்பல் 2433 பயணிகளை ஏற்றிச் செல்லும் வசதிகொண்டது. அக்கப்பலில் ஒரு முழுவசதி உள்ள **உடற்பயிற்சி நிலையம், வெந்நீர் உள்ள குளிக்கும் குளம், விளையாட்டு மைதானம், ஒரு கோல்ப் விளையாட்டு மைதானம்** இவையனைத்தும் கப்பலின் அடித்தளத்தில் இருந்தன. இதில் ஆடம்பரமான சொகுசு மண்டபங்கள், அவற்றில் 24 மணி நேர சேவை, ஒரு இன்னிசைக் குழு, இது கலாமண்டபத்தில் இசைத்துக் கொண்டிருக்கும். பளபளக்கும் குளிக்கும் தொட்டிகள் இன்னும் பல வசதிகளும் அக்கப்பலில் இருந்தன.

1912, ஏப்ரல் 14 ஆம் நாள் டைட்டானிக் கப்பலின் முதல் பயணம் தொடங்கியது. அன்று இரவு கப்பல் வேகமாகச் சென்றுகொண்டிருக்கும்போது அது கடலினுள் உறைந்து கூர்மையாக நீட்டிக் கொண்டிருந்த பனிப்பாறைகளில் மோதியது. தண்ணீர் புகாத 16 பகுதிகள் அக்கப்பலுக்கு உண்டு. அவற்றில் 5 பகுதிகளில் பனிப்பாறைகள்

[illegible]

[illegible]

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சாத்தானுக்கு முதலிடம் கொடுத்து, பாவங்களில் சிக்கித் தோல்வியடைந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் சாத்தானை எதிர்த்து வெற்றியுடன் வெளிவரத்தக்கதாக ஆவிக்குரிய ஆயுதங்களைப் போதுமான அளவு செய்து கொள்ளவில்லை என்று தெரிகிறது. உங்களுக்கு எதிராக இருக்கிற போராட்டத்துக்கு உங்களை இப்பொழுதே ஆயத்தப்படுத்துங்கள். நன்றாக ஆயத்தம்செய்பவர்களுக்குச் சாத்தானின்மேல் வெற்றி ஒரு விளையாட்டுப் பொருளாகக் கிடைக்கும்.

இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் சாத்தான் நம்மீது பயன்படுத்தக் கூடிய அவனது தந்திரங்களையும், தாக்குதல் முறைகளையும் நாம் அறிந்திருக்கவேண்டும். அவன் நம்மை விட்டு ஓடத்தக்கதாக, அவனை எப்படி எதிர்த்துத் தாக்கினால் நமக்கு வெற்றி உறுதி. சாத்தான் என்னென்ன செய்வான் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். சாத்தான் நம்மை வீழ்ச்சியடையச் செய்யப் பயன்படுத்தும் உபாய தந்திரங்கள் எவை என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

சாத்தானின் உபாய தந்திரங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்

உலக வரலாற்றில் உள்ள மாபெரும் இராணுவத் தலைவர்கள் அனைவரும் உபாய தந்திரங்களில் சிறந்தவர்களாய் இருந்தார்கள். அமெரிக்கப் படைதளபதி **நார்மன் சுவார்ஸ் கோப்** பாலைவனப் புயல் தாக்குதலிலும் (Operation Desert Storm), பிரான்ஸ் தேசத்தின் புகழ்பெற்ற தளபதியாகிய **நெப்போலியன் போனபார்ட்,** பண்டைய உலக வரலாற்றில் கார்த்தேஜில் உள்ள **ஹான்னிபால்** போன்றவர்கள் உபாயதந்திரங்களில் சிறந்த தளபதிகள் ஆவர். எனினும் இவர்களில் எவருமே உபாயதந்திரங்களில் சாத்தானுக்கு ஈடாக முடியாது.

ஒவ்வொருவரையும் வீழ்ச்சியடையச் செய்ய என்னென்ன வழிகள் உள்ளன என்பது சாத்தானுக்குமட்டுமே தெரியும். ஒவ்வொருவருக்கும் என்னென்ன பிடிக்கும்? எதில் எளிதில் சலனமடைவார்கள்? எதன்மீது இரகசிய ஆசை வைத்துள்ளார்கள் என்பதை அறிந்து அவற்றைப் பயன்படுத்தித் தனிநபர்களைத் திறமையாக வீழ்ச்சியடையச் செய்வான்.

அவன் நம்மைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி முட்டாள் தனமான காரியங்களை நம்மை செய்ய வைத்துவிடுவான். அவன் நமது பலவீனங்களை நன்கு அறிந்திருப்பதே இதற்குக் காரணமாகும். குறிப்பிட்ட சில காரியங்கள் மீது நாம் எவ்வளவு ஆசை கொண்டுள்ளோம் என்பதை அறிந்து அதைப் பயன்படுத்தியே நம்மை வீழ்ச்சி அடையச் செய்து விடுவான்.

ஆனால் நம்மைத் தோற்கடிக்கச் சாத்தான் என்ன செய்வான் என்பதை நாம் அறிந்திருந்தால் அவன் பயன்படுத்தும் உபாய தந்திரத்தை அறிந்து, அதற்கு எதிராக நாம் ஒரு உபாய தந்திரத்தைப் பயன்படுத்தி அவனது முயற்சியைத் தோல்வி அடையச் செய்யலாம். சாத்தான் தன் பைக்குள் வைத்திருக்கும் உபாய தந்திரங்களில் சிலவற்றைப் பட்டியல் இட்டுக் காட்டுகிறேன்.

அ. அவன் சாத்தான் என்று நாம் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி மாறுவேஷம் போட்டுக்கொள்ளுகிறான்.

விஞ்ஞானிகள் கூறுகிறபடி, துருவப்பிரதேசக் கரடிகள் குளிர்மிகுந்த ஆர்ட்டிக் - வட துருவக் கடல்பகுதியில் பெரும்பாலும் சீல் இன மீன் களை உணவாகத் தின்றே வாழ்கின்றன. இக்கரடிகள் சீலைப் பிடிப்பதற்கு ஒரு உபாய தந்திரத்தைக் கையாளுகின்றன. சீல் தன் உணவைப் பெறப் பனிப்பாறையில் ஒரு துவாரம் போட்டுக்கொள்ளும். இந்தத் துவாரம் கரையோரமாக இருந்தால், கரடி தந்திரமாக அத்துவாரங் களைப் பயன்படுத்தி நன்றாக மூச்சை இழுத்துக்கொண்டு தண்ணீரினடியில் நீந்திச்செல்லும். சீல் இருக்குமிடம் சென்றதும் மீன் உண்டாக்குவது போன்ற ஒரு ஓசையை எழுப்பிவிட்டு திரும்ப வந்து துவாரத்தின் அருகே காத்திருக்கும். இந்த ஓசையைக் கேட்கும் சீல் தனக்கு இரை கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சியில் துவாரத்திற்கு வெளியே வரும். அது இரையைப் பிடிப்பதற்குப் பதிலாக அங்கே கரடிக்கு இரையாகிவிடும்.

சாத்தானும் இதே முறையில்தான் செயல்படுகிறான். சாத்தான் காரியங்களை அவற்றின் உண்மைத் தோற்றம் தெரியாதபடி செய்து விடுகிறான். பாவம் மிகவும் அழகானது, இன்பமானது என்று தோன்றச் செய்கிறான். பாவம் இன்பத்தைத் தரும், திருப்தியளிக்கும் என்று காட்டுகிறான். நாம் அந்த வலையில் சிக்கிய பிறகுதான், சாத்தான் நமது நண்பனைப் போல பழகி நம்மை ஏமாற்றிச் சிக்க வைத்துவிட்டான் என்று உணருகிறோம். அவன் திட்டமிட்டு நமது ஆத்துமாவை அழிக்க வகை செய்துவிட்டான் என்று அறிகிறோம். இவ்வாறு வஞ்சக புத்தியுள்ள நமது பகைவன் சாத்தானே.

எனவே தோற்றங்களைக் கண்டு இனிமேலாவது ஏமாறாமல் இருப்பீர்களா? வங்கித்தொழில் நமக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கிறது. வங்கி ஊழியர்களுக்குக் கள்ள நோட்டுக்களைக் கண்டறியக் கற்றுத் தரப்படும். அதற்கென விசேஷித்தப் பயிற்சியளிக்கப்படும். இந்தப் பயற்சியில் நல்ல நோட்டுக்கள் எப்படி இருக்கும், அவற்றின் அடையாளங்கள் என்னென்ன என்பதை மிகத் தெளிவாக அவர்களுக்குக் காட்டிக் கொடுக்கப்படும். உண்மையான நல்ல நோட்டுக்கள் எவை என்பதைக் கண்டறிய, அவற்றின் தனி அடையாளங்களை நன்கு கவனிக்கவேண்டும். அப்பொழுது தான் கள்ள நோட்டுக்களைக் கண்டு பிரித்தெடுக்க முடியும்.

இதேமுறையில் சாத்தானின் போலித் தோற்றங்களை நாம் கண்டறிய வேண்டுமானால், வேதவசனங்களைத் தெளிவாய்க் கற்றுக்கொள்ள வேண்டும். சாத்தானின் சூழ்ச்சிகள் எவ்வளவு அழகாகவும், விரும்பத் தக்கதாகவும் காணப்பட்டாலும், அது வேதாகமத்துக்கு முரணானதாக இருந்தால் அது "**சாத்தானின் கண்ணி**" என்று கண்டறிந்து, நாம் அதைவிட்டு விலகிவிடவேண்டும்.

ஆ.சாத்தான் எப்போதும் ஆண்டவர்மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவான்

ஆரம்ப முதலே சாத்தானின் உபாய தந்திரங்களில் ஒன்று ஆண்டவர் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாகும். ஏதேன் தோட்டத்தில் ஏவாள் வஞ்சிக்கப்பட்ட சோதனையை மறுபடியும் வாசித்துப் பாருங்கள். ஆதி.3:1-6. இங்கே தேவன் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதைத் தெளிவாகக் காண்கிறோம். தேவன்மீது நமக்கு உள்ள நம்பிக்கையை அவன் தன்னுடைய சாமர்த்தியத்தால் குறைத்துவிடுவான். அதற்கு அவன் கையாளும் முறைகளை இனி பார்ப்போம்:

1. நம்மை தனிமையாய் இருக்க வைப்பான்

ஆதி.3:1 இல், "**தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன் களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது**". இதைக் கவனியுங்கள். இங்கே ஆதாம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏவாள் சோதிக்கப்பட்டபோது ஆதாம் அவளுடன் இருந்ததுண்டோ? நிச்சயமாக இல்லை. இருந்திருந்தால் ஆதாம் ஏவாளைத் தடுத்திருப்பார். ஏவாள் வஞ்சிக்கப்பட இடம் கொடுத்திருக்க மாட்டான். 1 தீமோ 2:14 இல், "**ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள்**" என எழுதப்பட்டுள்ளது. ஏவாள் தனியாக இருந்த போதுதான் சாத்தான் அவளிடம் நயவஞ்சகமாகப் பேசி ஏமாற்றி, அவளைப் பாவத்தில் விழவைத்தான்.

சாத்தான் நம்மைவிட்டு ஓடும்படியாக நாம் அனைவரும் ஒன்றாகக் கூடி இருக்கவேண்டும். தனித்தனியாக இருக்கக்கூடாது. நாம் கூட்டமாகச் சாத்தானை எதிர்த்துத் துரத்திவிடலாம். நீங்கள் உங்கள் உள்ளூர் திருச்சபையில் சேர்ந்திராமல் தனியாக இருப்பீர்களானால் சாத்தான் தனது உபாயதந்திரங்களால் உங்களை வஞ்சித்து ஏமாற்றி விடுவான். எவருடனும் சேராமல் "தனிக்காட்டு இராஜா"வாகத்

திரிபவர்கள், சாத்தானின் வஞ்சகவலையில் சிக்கிக்கொள்ள அதிக வாய்ப்பு உண்டு. ஏனெனில் சாத்தானின் பொய்களுக்கு ஈடுசெய்து, அவர்களுக்கு உதவிசெய்ய நண்பர்களோ, சபை மக்களோ எவரும் இல்லை. அவர்களைச் சாத்தான் குறிவைத்துத் தாக்குவான்.

வேதாகமத்தை விசுவாசிக்கிற ஆவிக்குரிய ஒரு சபையில் நீங்கள் அங்கமாக இல்லாவிட்டால், இப்பொழுதே, இன்றே அத்தகைய ஒரு சபையில் சேர்ந்துகொள்ளுங்கள். இது உங்கள் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும்.

2. தேவனைப் பற்றி ஒரு கெட்ட சாயலை நம் முன் காட்டுவான்

ஆண்டவரைப் பற்றி ஒரு கெட்ட சாயலை நம் முன் காட்டி, அவர் மீது நமக்குள்ள நம்பிக்கையைக் குறைக்க சாத்தான் முற்படுவான். அரசியல் பிரச்சாரக் கூட்டங்களில் ஒருவர் மற்றவர்மேல் சேற்றை அள்ளி வீசுவது போல் அவதூறான காரியங்களைப் பேசுவது இயல்பு. ஒரு வேட்பாளர் இன்னொரு வேட்பாளரைப் பற்றி பொய்யான தகவல்களைக் கூறுவான். அவன் மற்றவர்கள் நலனில், அக்கறையில்லாதவன், திறமையற்றவன், நேர்மையற்றவன் என்றெல்லாம் கூறக்கூடும். இவ்வாறு சேற்றை அள்ளி வீசுவதில் முதல் நபர் சாத்தானே. அவன் எப்போதும் தாக்க நினைப்பது தேவனைத்தான்.

சாத்தான் ஏவாளைச் சந்தித்தபோது, "இந்தத் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களின் கனிகளையும் நீங்கள் புசிக்கக்கூடாது என்று தேவன் கூறியுள்ளாரா?" என்று கேட்டான். "இந்த அழகிய தோட்டத்தில் உங்களை வைத்திருக்கிறார். இதில் கனி மரங்களும், கனிகளும் நிறைய உள்ளன. இந்தக் கனிகளைப் புசிக்கக் கூடாது என்று தேவன் உங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறாராம். ஐயோ, என்ன பரிதாபம்!" என்ற சாத்தானின் கேள்வி ஏவாளிடம் இரக்க உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. சர்வாதிகார மனப்பான்மையுடன் தேவன் இப்படி உங்களுக்குத் தடை விதித்துள்ளாரே. இந்த உத்தரவால் நீங்கள் இருவரும் பசியோடு இருக்க வேண்டுமா? என்ற அர்த்தத்தோடு சாத்தான் பேசியது ஏவாளின் மனதில் சந்தேக விதையை ஊன்றிவிட்டது. அது இறுதியில் வலுவடைந்து, மரணத்துக்கேதுவான கனியைத் தந்துவிட்டது.

இன்றும் கிறிஸ்தவர்கள் சாத்தானின் தூண்டுதலால் தேவனுடைய தன்மையைக் குறைகூறும் அளவுக்கு வந்துவிட்டார்கள். இதனால் அவர்கள் "தேவன் நல்லவரானால் பிறக்கும் குழந்தைகள் ஏன்

இறக்கிறார்கள்?" என்று கேட்கிறார்கள். உலகில் எங்கும் சண்டைகளும், யுத்தங்களும் ஏன் வருகின்றன? தீமை ஏன் உலகில் நிலைகொண்டிருக்கிறது? இக்கேள்விகள் மூலம் தேவன் நல்லவரல்ல என்று உணர்த்துகிறார்கள். இவற்றுக்கெல்லாம் தேவனே ஒரு வகையில் காரணம். மனிதனின் கலக குணம் காரணமல்ல என்கிறார்கள்.

கிறிஸ்தவர்கள் இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். நமக்கு தேவனுடைய உண்மையான இயல்பும், பண்பும் தெரியும். அவர் பரிசுத்தர், அவர் நீதியுள்ளவர். ஆகவே சாத்தானின் சேறு வாரி வீசும் தன்மையை நாம் எதிர்க்கவேண்டும். நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கு நமது தேவனின் உத்தமத் தன்மையை எடுத்துக்காட்ட வேண்டும்.

3. உண்மையைப் புரட்டுவான்

தவறான கருத்துக்களைக் கூறி நமக்கு தேவன் மீதுள்ள நம்பிக்கையைக் குறைக்க முயற்சிப்பது சாத்தானின் வேலை. சாத்தான் வெளிப்படையாகப் பொய் கூறத் தயங்குவதில்லை. ஆதாம், ஏவாள் இருவரிடமும் தடைசெய்யப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்கும் நாளில் சாகவே சாவீர்கள் என்றுதான் தேவன் கூறியிருந்தார். ஆனால் சாத்தான் அவர்களிடம் நீங்கள் அந்த மரத்தின் கனியைப் புசித்தால் சாகவே மாட்டீர்கள். "நீங்கள் தேவர்களைப் போல் இருப்பீர்கள்" என்று துணிகரமாக ஒரு பொய்யைச் சொன்னான் (ஆதி.3:4). சாத்தான் பொய் கூறுவதிலும் சாதுரியமானவன்.

அவன் தொடர்ந்து கூறுகிறான்: "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்" என்றான் (ஆதி.3:5). அவர்களது கண்கள் திறக்கப்படும் என்பதும், அவர்கள் நன்மை தீமை அறியும் திறனைப் பெறுவார்கள் என்பதும் உண்மை. ஆனால் தேவனுடைய நோக்கத்தைக் குறித்துச் சாத்தான் பொய் சொன்னான். தேவன் தமது உரிமைகளைப் பொறாமையுடன் மறைக்கிறார் என்று சாத்தான் கூறினான். உண்மையில் தேவன் மனித இனத்தை வேதனை, தலைவலி இவற்றிலிருந்து காக்கிறார் என்பதே அவரது கட்டளையின் நோக்கம் ஆகும். இவ்வாறு சாத்தான் உண்மைகளைப் பொய்யுடன் கலந்து மக்களை ஏமாற்றுதல் அவனது உபாய தந்திரம் ஆகும். அவனது தந்திரத்தை அறியாதவர்கள்

இப்படிப்பட்ட வார்த்தைகளை நம்பி விடுவார்கள்.

உங்களுக்கு தேவன் மீதுள்ள நம்பிக்கையைச் சாத்தான் எந்த வகையிலும் குறைக்க இடம் கொடாதிருங்கள்.

தேவனுடைய பண்பு, இயல்பு, தன்மை, ஒருமைப்பாடு, தேவ குமாரன், இயேசுகிறிஸ்து, பரிசுத்தஆவியானவர் தேவனுடைய வார்த்தையாகிய வேதவசனங்கள் இவற்றின்மீது உங்களுக்கு இருக்கும் நம்பிக்கையும் விசுவாசமும் குறைய இடம் கொடாதிருங்கள்.

நீங்கள் இடம் கொடுத்துவிட்டால் உங்கள் கவசத்தில் ஒரு ஓட்டையைச் சாத்தான் கண்டு பிடித்துவிடுவான். அதன் வழியாக அவன் உங்களைத் தாக்குவான். அவனுக்கு அந்த வாய்ப்பைக் கொடாதீர்கள்.

4. சாத்தான் எப்போதும் நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கத் தூண்டுவான்

நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கத் தூண்டுவது சாத்தானுடைய உபாய தந்திரங்களில் ஒன்று. அப்படிச் செய்வதற்கான நோக்கத்தையும், வழிகளையும் அவன் கூறிவிடுவான். சாத்தான் ஏவாளைச் சோதிக்கச் சென்றபோது, அவன் அவளது கவனம் தேவனைவிட்டு விலகி, அவள் பார்க்கவேண்டும் என்று அவன் விரும்பிய விலக்கப்பட்ட மரத்தின் கனிமீது திரும்புமாறு செய்துவிட்டான். அவ்வாறு அவளது முழுக்கவனமும் அந்தக் கனியின் மீது திருப்பப்பட்டபின், அந்தக் கனியைப் பறித்துப் புசிக்கவேண்டும், ருசிக்கவேண்டும் என்னும் அவளுடைய ஆசை உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டான்.

1. அவளது கண்கள் கனியின் நிறத்தைக் கண்டன.

2. அவளது நாசியைக் கனியின் வாசனைத் துளைத்தது.

3. அவளது நாக்கு கனியின் சுவையை ருசிக்க ஆசைப்பட்டது.

4. அவளது மனம் அக்கனியைப் பறித்துப் புசிக்க விரும்பியது.

"அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி,3:6).

நாம் பாவம் செய்வதற்குக் காரணத்தையும் சாத்தான் தந்துவிடுவான். எனவே நாம் செய்வது சரி என்று நியாயப்படுத்த நாம் முயல்வோம். சில

காரியங்களைச் செய்வது பாவமாயிருந்தாலும் அது நமக்குத் தேவை என்று உணர்த்திவிடுவான். தான் செய்வது சரியானது. அது தவறாக இருக்க முடியாது என்று நம்பச் செய்துவிடுவான். இம்முறையில் நாம் சிந்திக்கத் தொடங்கிவிட்டால், நாம் சாத்தானின் வலையில் விழுந்து விட்டோம் என்று அறியலாம். இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு இவ்வாறு கூறகிறான்: "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப் பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக்.1:14,15).

சாத்தான் தன்னையும், தன்னுடைய உபாயதந்திரங்களையும், அடையாளம் கண்டுகொள்ளமுடியாத அளவில் மாறு வேஷம்போட்டு ஏமாற்றி, நமக்கு தேவன் மீதுள்ள நம்பிக்கையையும், கர்த்தருடைய வார்த்தையின் மீதுள்ள நம்பிக்கையையும் குறையச் செய்கிறான். இது நாம் கீழ்ப்படியாமல் இருப்பதற்குரிய நிலையாகும். தேவன் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் ஒருவருக்குள்ள நம்பிக்கை குறையும்போது, பாவம் மிக அருகிலேயே உள்ளே நுழையக் காத்துக் கொண்டிருக்கிறது. சாத்தானின் சூழ்ச்சிகளை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்துத் தடுத்து விடவேண்டும். அதிக காலம் நாம் அவனால் ஏமாற்றப் பட்டுக் கொண்டிருப்போமானால், நாம் அவனுடைய கண்ணிகளி லிருந்து மீள முடியாதபடி சிக்கிக்கொள்ளுவோம்.

5. சாத்தான் எப்போதும் பலமுனை தாக்குதல் அணுகுமுறையையே பயன்படுத்துகிறான்

மக்களைப் பாவத்தில் விழச் செய்வதற்காகச் சாத்தான் பலமுனைத் தாக்குதல் நடத்துவான். அவனது முயற்சிகளில் உடல்நலக் குறைவை உண்டாக்குதல் ஒன்றாக இருக்கலாம் (லூக்.13:10-16). இவ்வாறு நாம் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருக் கும்போது சாத்தான் ஒவ்வொன்றாகப் பல துன்பங்களையும், நெருக்கடி களையும் உண்டாக்குவான். அது ஒருவேளை பக்தன் யோபுவுக்கு ஏற்பட்டதுபோல நாம் பிரியம் வைத்திருக்கும் பிள்ளைகள், ஆஸ்திகள் இவற்றை இழக்கும் சூழ்நிலையாக இருக்கலாம் (யோபு 1) அல்லது அநியாயமான குற்றச்சாட்டுக்களை நாம் கேட்கவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம் (யோபு 4). மேற்கண்ட முயற்சிகள் சாத்தானுக்குப் போது மானவையாக இல்லாவிட்டால், அவன் நம்மைக் கட்டுப்படுத்த முயல்வான். சாத்தானால் கிறிஸ்தவர்களுக்குள் புக முடியாது. ஆனால்

அவனால் நம்மை ஜெயிக்க முடியும். விசுவாசிகள் சாத்தானுடைய தந்திரத்துக்கு உட்பட்டு விழும்போது அவர்கள் எதை விரும்பித் தெரிந்தெடுக்கிறார்களோ, அதுவே சாத்தானின் விருப்பமும், அவர்களுடைய இலட்சியம் எதுவோ அதுவே சாத்தானின் இலட்சியமும் ஆகிவிடும். கிறிஸ்துவானவர் விசுவாசிகளில் ஆதிக்கம் செலுத்தும்போது மட்டுமே இந்த நிலை மாறும். "உலகத்திலிருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்" (1யோவான் 4:4).

எதிரியின் பலம் அறிந்து தற்காப்பு செய்துகொள்ளுங்கள்

நம்முடைய வேதம் சாத்தானை தந்திரமுள்ளவன் என்று எச்சரிக்கிறது. அவனுடைய திறமையையும், பலத்தையும் நீங்கள் குறைவாக மதிப்பிடுவீர்களானால் நீங்கள் நேரடியாக அவனுடைய கைகளுக்குள் விளையாடிக்கொண்டே சென்று விழுந்துவிடுகிறீர்கள். வல்லமையுள்ள தூதனாகவும், எங்கும் பரவியிருக்கும் கேருபாகவும் இருக்கும் சாத்தானுக்கு முன்பாக, அலட்சியமாக இருந்துகொண்டிருப்பவர்கள் உண்மையிலேயே அறிவில்லாத முட்டாள்களாகத்தான் இருப்பார்கள். சாத்தான் தேவனால் படைக்கப்பட்டவர்களிலேயே முதன்மையானவன்.

சாத்தானின் திறமையையும் சக்தியையும் நீங்கள் இரண்டு காரணங்களால் குறைத்து மதிப்பிடக்கூடாது. முதலாவதாக சாத்தான் உங்களைவிடத் திறமையானவன். அவன் ஒரு புத்தி சாதுர்யமுள்ள தூதன். அவன் ஒரு பிரதான தூதன். தேவனோடு அவன் செய்த யுத்தத்தின்போது தூதர் கூட்டத்தில் மூன்றில் ஒரு பகுதியைத் தனக்கு ஆதரவாகச் சேர்த்துக்கொள்ளும் திறமை படைத்தவன்(வெளி.12:4). மேலும் ஒரு தேவதூதன் என்ற நிலையில், படைப்பில் மனித இனத்தைவிட ஒருபடி மேலானவன். இயேசு பரலோகத்தைவிட்டு இந்த பூமியில் மனிதனாக அவதரித்தபோது, அவர் தேவதூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவராய் இருந்தார்(சங்.8:5, எபி.2:7,9). தேவதூதர்கள் படைப்பிலேயே மனிதர்களைவிட உயர்ந்தவர்கள். வல்லமை, திறமை, புத்திக்கூர்மை இவை எல்லாவற்றிலும் தேவதூதர்கள் மனிதர்களைவிட உயர்ந்தவர்கள். எனவே சாத்தானைக் குறித்து குறைத்து மதிப்பிடாதேயுங்கள். ஏனெனில் நீங்கள் அவனுடன் விளையாட நினைத்தால், ஆற்றல்பொருந்திய மெஷின் டாங்கை ஒரு சாதாரண துப்பாக்கியைக் கொண்டு எதிர்ப்பதுபோலாகும்.

இரண்டாவதாக, வயது அதிகமாக, அதிகமாக ஞானமும் அனுபவமும் நமக்கு அதிகமாகக் கிடைக்கும். இப்பொழுது பார்ப்போம். யார் அதிக

முதிர்ச்சியடைந்தவர்கள்? சாத்தானா? நீங்களா? சாத்தான் ஆயிரக்கணக்கான வருடங்கள் அனுபவம்பெற்றவன். அவனது உபாயதந்திரங்களும் அதற்கேற்ப முதிர்ச்சியடைந்துள்ளன. நீங்கள் சாத்தானை எதிர்க்கும் போது அவனது திறமையைக் குறைத்து மதிப்பிடுவீர்களானால் அவன் உங்களைவிட்டு ஓடிப்போக வாய்ப்பே இல்லை. அவன் உங்களை தான் வைக்க விரும்பும் இடத்தில் வைத்துவிடுவான். அதிக தன்னம்பிக்கையுள்ளவர்களாக, தகுந்த ஆயத்தம் செய்யாதவர்களாக, சாத்தானின் தந்திரங்களையும், உத்திகளையும் உணராதவர்களாக உங்களை வைத்துக்கொண்டு, தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றுவான்.

ஆனால் இதைக்கண்டு நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள்மட்டும் தனியாகச் சாத்தானுடன் போராடுவதில்லை. கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதரர்கள், சகோதரிகள், பிற விசுவாசிகளும் சாத்தானுடன் போராடுவார்கள். மேலும் உங்களுடன் வல்லமை பொருந்திய தலைமைத் தளபதியான நம் கர்த்தர் உங்களுடன் இருக்கிறார். "**கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்**" **(யாத்.15:3).** மேலும் உங்களுக்கு ஆலோசனை கூறி வழிகாட்டுகிற 'கையேடு' ஒன்றும் உங்களிடம் உள்ளது. அது தேவஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. அந்த கையேடு தவறில்லாதது, மாறாதது, என்றென்றும் பரலோகத்தில் இருக்கும். அதுவே பரிசுத்த வேதாகமம்! மேலும் நமக்குள்ள இன்னொரு மாபெரும் அனுகூலம் எதுவெனில், "**உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் (1யோவான் 4:4)** என்பதே.

உங்களிடமிருந்து சாத்தான் விலகியோட வேண்டுமானால், உங்களை வீழ்ச்சியடையச் செய்ய அவன் செய்யும் சூழ்ச்சிகளை விழிப்புணர்வுடன் கண்டுபிடித்துக்கொள்ளுங்கள். வேதாகமத்தில் தேவன் கூறும் சாத்தானை மேற்கொள்ளும் வழிகளைப் பின்பற்றுங்கள். இதைத்தான் அடுத்த அத்தியாயத்தில் விரிவாகப் பார்க்கப்போகிறோம்.

சாத்தானின் தாக்குதல்களைத் தாங்கிக்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள்!

வான்வெளித் தாக்குதல் ஆரம்பிக்கப்போகிறது என்பதை அறிவிக்கும் சங்கு ஒலித்து முடிந்துவிட்டது. குண்டுகள் வெடிக்கின்றன. சாத்தானின் தளபதிகள் வானில் கர்ணமடித்துக்கொண்டிருக்கின்றனர். நம்மீது எப்போது தாக்குதல் வரும் என்பதை அறியோம். நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம் வந்துவிட்டது. சோதனை நம் வாசலை வந்து தட்டிக்கொண்டிருக்கிறது. நாம் என்ன செய்யலாம்? என்ன செய்ய முடியும்? இந்த நெருக்கடியின் மத்தியில் கிறிஸ்தவர்களுக்கு ஒரு போர்த்திட்டம் தேவை. நமக்கு வரும் தாக்குதல் சாத்தானிடமிருந்து வருகிறது என்பதை அறிவோம். அவன் எந்த மாறுவேஷத்தில் வேண்டு மானாலும் இருக்கலாம். ஏற்கெனவே நாம் அவனுடைய கண்ணி களுக்குள் விழுந்து அனுபவப்பட்டிருக்கிறோம். எனவே அவனது உபாய தந்திரங்களை நாம் கண்டு கொள்ள முடியும். தற்போது ஆவிக்குரிய நிலையில் நாம் நம்மைப் பலப்படுத்தியிருக்கிறோம். ஆனாலும் நாம் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? நாம் செய்ய வேண்டிய காரியங்களை வேதாகமம் நமக்குக் கூறுகிறது.

அ. உங்கள் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்.

எபேசி.6:11 இவ்வாறு கூறுகிறது: "**நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்**". சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்வதுமட்டும் போதாது. நாம் எப்போதும் அதைக் கடைபிடிக்க வேண்டும். எனவேதான் தொடர்ந்து இப்படிக் கூறுகிறார்: "**தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத் தையும் எடுத்துக்கொள்ளுங்கள்**" (எபே.6:13). இதே கருத்துடன்தான் அடுத்த வசனமும் தொடங்குகிறது. "**நிற்கவும் திராணியுள்ளவர்களாகும் படிக்கு**" ஒரு போர்வீரன் தன்னுடைய போர்க்கவசத்தைக் கழற்றித் தூர எறிந்துவிட்டுப் போர்க்களத்தில் நிற்பானானால், அவனுக்கு ஒரு

பாதுகாப்பும் இல்லை. போராட்டத்தின்போது நாம் மிகவும் உறுதியாய் இருக்கவேண்டும்.

தேவன் நமக்குத் தந்துள்ள பாதுகாப்புக் கவசத்தைப் பற்றி நாம் படிக்கும்போது **சத்தியம் என்னும் அரைக்கச்சையைக்** குறித்துப் பார்க்கி றோம். இதுதான் **தேவனுடைய சத்தியம்.** இது தேவனுடைய வார்த்தை களில் அடங்கியிருக்கிறது. இது அனுதின வாழ்க்கையில் சொல்லிலும், செயலிலும், நேர்மையிலும் வெளிப்படுத்தப்படுகிறது. **நீதி என்னும் மார்க்கவசமும்** அதில் உண்டு. நாம் இரட்சிக்கப்படும்போது, நீதியுள்ளவர் களாக மாறுகிறோம். அப்பொழுது நாம் நம்முடைய வாழ்வில் நீதியை நிலைநாட்டவும், நம் செயல்களின் மூலம் நீதியை வெளிப்படுத்தவும் வேண்டியது அவசியம். இது நமது கடமை. மேலும் சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய **ஆயத்தம் என்னும் பாதரட்சை** நமக்குத் தரப்படுகிறது. இது தேவன் நம்மை என்னென்ன ஊழியம் செய்யச் சொல்லுகிறாரோ, எங்கெங்கு போகச்சொல்லுகிறாரோ, அங்கெல்லாம் செல்வதற்குரிய ஆயத்த நிலையைக் குறிக்கிறது.

பின்னர் **விசுவாசம் என்னும் கேடகம்.** இது நமக்குச் சாத்தானால் ஏவப்பட்டு உண்டாகும் பயங்கள், சந்தேகங்கள் இவற்றிலிருந்து பாதுகாப்புத் தருகிறது. இவற்றோடு **இரட்சிப்பென்னும் தலைச்சீராவும்** உண்டு. இது இரட்சிப்பு நமக்களிக்கும் உறுதி, புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றைக் குறிக்கும். இவையெல்லாவற்றையும்விட "**ஆவியின் பட்டயம்**" முக்கியமான ஒன்றாகும். இதுவே ஆற்றல் நிறைந்த **தேவனுடைய வார்த்தையாகும்.** மற்ற எல்லா சர்வாயுத வர்க்கமும் நம்மைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தாலும் இந்த ஆவியின் பட்டயம் ஒன்றே எதிரியைத் தாக்கவும், எதிரியின் தாக்குதலிலிருந்து நம்மை காக்கவும் தரப்பட்டுள்ளது. இதன் உதவியால்தான் நாம் முன்னேறிச் செல்லுகிறோம். எதிரியின் எல்லையைத் தாண்டி மேற்கொள்வதற்கு உதவுவது இதுவே.

இந்தப் பட்டியலில் ஒரு பொருள் குறைகிறது. அதாவது நமது முதுகைப் பாதுகாக்க எதுவும் தரப்படவில்லை. நாம் சாத்தானுக்கு முதுகைக் காட்டி ஓடினால்தான் அவன் நம்மை தாக்கமுடியும். எனவே சாத்தானை முறியடிக்க ஒரே வழி, நாம் சர்வாயுதவர்க்கத்தையும் அணிந்தவர்களாய் நேருக்குநேர் அவனைச் சந்தித்து, போராடி முன்னேற வேண்டும். நிலைத்து நின்று போரிடவேண்டும். அப்பொழுது சாத்தான் நம்மை விட்டு ஓடிப்போவான்.

ஆ. உங்களையே கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள்

"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" (யாக்.4:7) என்று கூறிய யாக்கோபு தொடர்ந்து "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கமாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்.4:8-10) என்று கூறியுள்ளார். சாத்தானை மேற்கொள்வதற்கு, நாம் கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுவது மிகவும் முக்கியமாகும். அவனைத் தோற்கடிக்க நமது பலம் போதாது. ஆனால் தேவனால் அது முடியும். **நாம் நம்மைத் தேவனுக்கு அர்ப்பணித்துவிடும்போது, அவர் நம்மை வல்லமையினால் நிரப்புவார். அது சாத்தானுக்கு மரணஅடியாக அமைந்துவிடும்.**

அர்ப்பணிப்பு என்பதில் தீமையான காரியங்களைச் செய்வதிலிருந்து நமது கைகளை விலக்கிச் சுத்திகரித்தல் அடங்கும். இதை நாம் எப்படி செய்யமுடியும்? 1யோவான் 1:9ஆம் வசனம் கூறும் கொள்கையை நாம் செயல்படுத்தவேண்டும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்". பாவஅறிக்கை என்பது நம்முடைய ஆத்துமாவுக்கு நல்லது மட்டுமல்ல, நம்முடைய வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் பாவம் செய்யும்பொழுது பாவமன்னிப்புப் பெறுவதற்குரிய வழி இதுவேயாகும். பாவ அறிக்கைதான் பாவங்களை நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். வேறு எதுவும் இதைச் செய்ய முடியாது.

நாம் நம்முடைய கைகளைச் சுத்தப்படுத்தும்போது, நம்முடைய இருதயங்களையும் சுத்தப்படுத்தவேண்டும். 1 யோவான் 3:2,3 ஆகிய வசனங்கள் இதைத் தெளிவுபடுத்துகிறது. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்.

உங்களுடைய இருதயம் சுகந்தவர்க்கம்போல எரிந்து வாசனை வீச வேண்டும். இதுதான் **சுத்திகரித்தல்** என்பதன் கருத்து. தேவன் அருவருக்கும் காரியங்கள், தேவனுக்குப் பிரியமில்லாதவை உங்கள் இருதயத்தில் இருந்தால் அவற்றை அகற்றி சுத்தப்படுத்துங்கள். தேவனை ஆழமாய், உள்ளன்போடு நேசியுங்கள். முழுமனதோடு அதிகமாக நேசியுங்கள். உங்கள் இருதயம் அவருக்கு உகந்த சுகந்த வாசனையாய் இருக்கட்டும். உங்கள் பாவங்களுக்காக அழுங்கள். உங்களைச் சுற்றியிருக்கிறவர்களின் பாவங்களுக்காகவும் துக்கப்படுங்கள். உங்கள் குடும்பத்துக்காகத் துக்கப்படுங்கள். இவையெல்லாவற்றின் மத்தியிலும் உங்களைத் தாழ்த்துங்கள். உங்களையும், உங்கள் வலிமையையும் குறித்துப் பெருமையாக எண்ணாதேயுங்கள். நீங்கள் ஆவிக்குரிய நிலையில் ஒரு **கோலியாத்து** என்று நினைத்துக்கொண்டு சாத்தானுக்கு எதிராக யுத்தத்துக்குச் செல்லாதீர்கள். அப்படிச் சென்றால் தாவீதுக்கு எதிராகக் கோலியாத்தும், அவனைச் சேர்ந்த பெலிஸ்தியரும் அடைந்த நிலையையே அடைவீர்கள். **சாத்தானின் பெருமையை அடக்கும் ஒரேவழி இயேசுவின் தாழ்மை மட்டுமே! கிறிஸ்துவின் தாழ்மையுடன் தேவனுக்கு உங்களை அர்ப்பணியுங்கள்!!**

இ.வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்ளுங்கள்

சாத்தான் இயேசுவைச் சோதித்தபோது அவர் இவ்வாறு கூறினார். “மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே” (மத்.4:4). இவ்வாறு தேவனால் கூறப்பட்ட வாக்குத்தத்தங்கள் வேதாகமத்தில் 7487 இருப்பதாக ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். ஒவ்வொரு சோதனை நேரத்திலும் நமக்குப் பொருத்தமான ஒன்றிரண்டு வாக்குத்தத்தங்களைக் கண்டுபிடிக்கலாம். வேதாகமத்தில் இந்த வாக்குத்தத்தங்கள் எங்கு உள்ளன என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லையானால், அல்லது நம் இருதயத்தில் அவற்றை மனப்பாடம் செய்து இருப்பு வைத்துக் கொள்ளவில்லையானால், நம்மால் அவற்றின் மூலம் நன்மையடைய முடியாது.

அநேக தடவைகளில் நாம் அமெரிக்காவின் **மிசிசிப்பி** நதிக்கரைக்கு வந்து களைப்படைந்த யாத்திரீகனைப் போல இருக்கிறோம். அவன் ஆற்றைக் கடக்கவேண்டும். அங்கே பாலம் இல்லை. அது குளிர்காலம் ஆனபடியால் ஆற்றில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டி ஆகியிருந்தது. அந்தப் பனிப்பாலம் மெல்லியதாயிருந்தால் பயணி நடக்கும்போது அது

உடைந்து அவன் ஆற்றுத்தண்ணீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுவிடும். நேரம் இருட்டிக்கொண்டிருந்தது. அவன் ஆற்றைக் கடந்து விரைவில் மறுகரைக்குச் சென்றுவிடவேண்டும். பனிப்படலம் எவ்வளவு தடிமனானது? அவனைத் தாங்குமா? என்ற விபரம் தெரியாததால், மிகுந்த தயக்கத்துடனும், பயத்துடனும், நேராக பனிக்கட்டியின் மீது நடந்தால் அவனுடைய எடையினால் பனிப்படலம் உடைந்துவிடும் என்று நினைத்து, பனிக்கட்டியின் மீது தனது எடை பரவலாக விழும்படி படுத்துக்கொண்டு மெதுவாக நகர்ந்தான். இவ்வாறு கைகளையும் முழங்கால்களையும் ஊன்றி நகர்ந்து நடுப்பகுதியை அடைந்தான்.

அப்பொழுது அவனுக்குப் பின்னால் யாரோ உற்சாகமாகப் பாடிக் கொண்டு வருவது கேட்டது. ஒருவன் தனது குதிரை வண்டியில் நிலக்கரி பாரத்தை ஏற்றிக்கொண்டு, சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டு வந்து கொண்டிருந்தான். ஒருவன் பனிப்பாறை உடைந்துவிடுமோ என்ற பயத்தில் படுத்துக்கொண்டு தவழுகிறான். அதேவேளையில் இன்னொருவன் நிலக்கரி பாரம் ஏற்றிய வண்டியைக் குதிரைகள் இழுத்துவர, உற்சாகமாக, நம்பிக்கையுடன் பனிப்பாறையில் பயணம் செய்கிறான். இது பார்ப்பதற்கு அற்புதமான ஒரு காட்சி!

குதிரை வண்டிக்காரன் நதியின்மீது படர்ந்திருந்த பனிப்பாறை உறுதியானது; ஆகவே அதன்மீது தைரியமாகப் பாரவண்டியை ஓட்டிச் செல்லலாம் என்பதை அறிந்திருந்தான். அதைப்போலவே தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நமக்கு நம்பிக்கை வேண்டும். தமது வாக்குத்தத்தங்களில் தேவன் நமக்குத் துணையாக நம்மோடிருப்பதாகக் கூறியுள்ளார். "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று கூறுகிறார். இந்த வாக்குத்தத்தத்தை நம்பி, விசுவாசித்து, மன உறுதியுடன் செயல்படவேண்டும். நாம் அவரை நம்பு வோம். நம்முடைய ஆவிக்குரிய எதிரிகள் அனைவர் மீதும் வெற்றியைத் தருவதாக வாக்களித்திருக்கிறார். அவர் நம்மைத் தாங்கி, ஏந்திச் சுமந்து தப்புவிப்பதாக வாக்குத்தத்தம் தந்துள்ளார். அவருடைய சத்தியத்தை நம்புவோம்.

சாத்தானின் மீது நீங்கள் வெற்றிகொள்ள வேண்டுமானால், தேவனு டைய வாக்குத்தத்தங்கள் மீது நீங்கள் பயந்து பயந்து தவழ்ந்து செல்ல வேண்டியதில்லை. அந்த வாக்குத்தத்தங்கள் உறுதியானவையா? உடைந்துவிடுமா? நம்மைக் கைவிட்டுவிடுமா? என்ற தயக்கமும் பயமும் நமக்கு இருக்கத் தேவையில்லை. அந்தக் குதிரை

வண்டிக்காரனைப்போல தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் நாம் முன்னேறிச்செல்ல வேண்டும். தமது வார்த்தைகளைப்போல தேவனும் நல்லவர். அவர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கும் காரியங்களைத் தவறாமல் செய்து நிறைவேற்றுவார்.

ஈ. ஒருபோதும் முயற்சியை விட்டுவிடாதீர்கள்

கடைசியாக ஒரு காரியம். உங்கள் வாழ்க்கையில் சாத்தானைத் தோற்கடிப்பதற்குக் கருத்தரங்கங்களும், புத்தகங்களும், ஒலி-ஒளி நாடாக்களும் அல்லது வேறெந்தச் சாதனங்களும் தேவையில்லை. தேவையானது ஒன்றே. வேதாகமத்தை முக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டும். சாத்தான் உங்களைவிட்டு ஓடவேண்டுமானால் வேதாகமம் என்ன கூறுகிறது என்பதைப் பாருங்கள். அதன் பொருள் என்ன? அது உங்கள் வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்தும் என்று கண்டுபிடியுங்கள். நீங்கள் வாசிப்பதில் ஏதாவது உங்களுக்குப் புரியாமல் இருந்தால், அதை மறுபடியும் வாசியுங்கள். அதை உங்களுக்குப் புரியவைக்கும்படி பரிசுத்த ஆவியானவரிடம் வேண்டுதல் செய்யுங்கள். இப்பொழுதும் உங்களுக்குச் சரியான விளக்கம் கிடைக்கவில்லையானால், விசுவாசத்தில் உறுதியும், முதிர்ச்சியும் உள்ள பெரியவர்களிடத்தில் கேளுங்கள். சபை மூப்பரோ, போதகரோ, உங்களது நம்பிக்கைக்குரியவர்களோ உங்கள் சந்தேகங்களைத் தெளிய வைப்பார்கள். நீங்கள் எதைச் செய்தாலும் இடையில் சோர்வடைந்து முயற்சியை விட்டுவிடாதிருங்கள். உங்கள் காரியங்களை தேவனிடம் அர்ப்பணியுங்கள். சாத்தானை எதிர்த்து நில்லுங்கள். இவற்றைச் செய்துவிட்டு உறுதியுடன், நம்பிக்கையுடன் நிமிர்ந்து நில்லுங்கள். அப்பொழுது சாத்தான் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

சாத்தான் உங்களைத் தாக்கமுடியாதபடி வாழத் தொடங்கிவிட்டீர்களா? உங்கள் பிரச்சனைகளுக்கு விடை கிடைத்துவிட்டதா? சாத்தானை துரத்துவது எப்படி என்பதை வேதத்தில் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். கிறிஸ்து தமது மரணத்தின் மூலம் உங்களுக்குப் பெற்றுத் தந்த வெற்றியைச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குள் இருக்கும்போது, பிதாவாகிய தேவன் உங்கள்மீது கரிசனையுடன் உங்களையே பார்த்துக் கொண்டிருக்கும்போது, குமாரனாகிய தேவன் உங்களுக்குத் துணையாக உங்களருகில் இருக்கும்போது, நீங்கள் சாத்தானைத் தோற்கடிக்க முடியும்.

விசுவாசியுங்கள் ! ஏற்றுக்கொள்ளுங்கள் !!

"**என்றென்றும் வெற்றி**" என்ற தனது புத்தகத்தில் **F.J.ஹியூ கெல்** இரண்டாம் உலகயுத்தத்தின்போது நடந்த ஒரு கதையைக் கூறுகிறார். ஜப்பானியர்கள் **யோனத்தான் வெயின்ரைட்** என்னும் தளபதியைக் கைது செய்தபோது, மஞ்சூரியாவிலுள்ள கைதிகள் மையத்தில் சிறைக்கைதியாக அடைக்கப்பட்டிருந்தார். அங்கு அவர் மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டார். அவர் மனம் உடைந்து, உடல் சோர்ந்து, ஒடுக்கப்பட்டு, நம்பிக்கையிழந்து பசியால் வாடும் கைதியாகக் காணப்பட்டார்.

இறுதியாக ஜப்பானியர்கள் சரணடைந்தார்கள். யுத்தம் முடிந்தது. அமெரிக்கப்படையிலிருந்து ஒரு அதிகாரி இந்த முகாமுக்கு அனுப்பப் பட்டார். அவர் இந்தத் தளபதியிடம், "போர் முடிந்துவிட்டது. ஜப்பானியர் தோற்றுவிட்டனர். இப்பொழுது நீங்கள் விடுதலையடைந்து விட்டீர்கள். நீங்கள் இப்பொழுது முழுவலிமையுடனும், அதிகாரத்துடனும் முன் போலத் தளபதியாகச் செயல்படலாம்" என்னும் செய்தியைக் கூறினார். இந்தச் செய்தியைக் கேட்ட **வெயின்ரைட்** தனது கூடாரத்துக்குத் திரும்பினார். அங்கிருந்த காவலாளிகள் முன்போல அவரை அவமரியாதையாகவும், அலட்சியமாகவும் நடத்தத் தொடங்கினர். கேட்ட வெற்றிச் செய்தியை மனதிற்கொண்ட தளபதி, அதிகாரத்துடனும், மிடுக்குடனும் இவ்வாறு கூறினார். "நீங்கள் நினைப்பது போல் நான் ஒரு கைதி இல்லை. நான் முழு அதிகாரம் பெற்ற ஒரு தளபதி. இங்கே நான்தான் அதிகாரி. இப்பொழுது நான் பிறப்பிக்கும் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்" என்றார். அந்நேரம் முதலே தளபதியான **வெயின் ரைட்** முழு அதிகாரத்துடன் செயல்படத் தொடங்கினார்.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் நமக்கும் இதுவே அனுபவமாக வேண்டும். நாம் தனியாகச் சாத்தானைத் தோற்கடிக்க முடியாது. அவன் ஒரு தூதன் என்ற நிலையில் நம்மைவிட அதிகப் புத்திசாலி. **அபிஷேகம் பெற்ற கேருப்** என்ற நிலையில் நம்மைவிட அதிக வல்லமை படைத்தவன். ஆனால் சாத்தானை வெற்றி கொண்ட கிறிஸ்து நம்முடன் இருக்கிறார். இந்த உண்மையை நாம் விசுவாசித்து, ஏற்றுக்கொள்ளவேண்டும்.

வேதாகமம் இவ்வாறு நமக்குக் கூறுகிறது: "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத்தாங்கத் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1கொரி.10:13). இதை நீங்கள் நம்புகிறீர்களா?

எபிரேயர் 2:18 இல் கிறிஸ்துவைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறதென்ன? "ஆதலால், கிறிஸ்துதாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்". இந்த உண்மையை விடாமல் பற்றிக்கொள்ளுவீர்களா?

இதுபோன்ற வாக்குத்தத்தங்களில் முக்கியமான ஒன்று பிலி.4:13இல் தரப்பட்டுள்ளது. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு". இந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொள்ளுவீர்களா?

அப்படியானால் உங்களுடைய உரிமைகளை உறுதி செய்து கொள்ள விழித்தெழுங்கள். உங்கள் எதிராளி உங்களை வஞ்சிக்க வரும்போது பதுங்கிக் குனியாதீர்கள். நிமிர்ந்து நில்லுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வெற்றியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக நீங்கள் ஆகிவிடும்போது உங்கள் மீது சாத்தானுக்கு எந்த அதிகாரமும் இல்லை. "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17). உங்களை நேசித்துத் தம்முடைய வாழ்க்கையின் மூலம் உங்களை இரட்சித்தவர் மூலமாக நீங்கள் வெற்றிபெற்றவர்களாய் இருக்கிறீர்கள். இதை உறுதியாய் நினைத்துக்கொள்ளுங்கள்.

"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்.4:10).

"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" (யாக்.4:8)

"தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக்.4:7) அப்பொழுது வெற்றி உங்களுக்கே!

அனுதினமும் கிறிஸ்துவுடன்

காலை தியான வேளையிலும் குடும்ப ஜெப வேளையிலும் தியானிப்பதற்கு ஏற்ற நூல்!

வருடம் ஒருமுறை வேதாகமத்தை படித்து முடிப்பதற்கு ஏற்ற அட்டவணை!

இருமாதத்திற்கு ஒருமுறை இத்தியான நூல் வெளி வருகிறது. மாதிரி பிரதிக்கு எங்களுக்கு எழுதுங்கள்.

தியானப்புத்தகத்தின் ஆண்டு சந்தா ரூ.120/- மட்டும்.

சத்தியவசன சஞ்சிகை

சிறந்த வேதாகம ஆசிரியர்களால் எழுதப்பட்ட ஆவிக்குரிய கட்டுரைகளும், தொடர் வேத பாடங்களும் மற்றும் பலவித சிறப்பு அம்சங்களும் அடங்கிய சத்தியவசன சஞ்சிகை இருமாதங்களுக்கு ஒருமுறை வெளிவருகிறது.

இவ்விதழை வாசித்து ஆசீர்வாதம் அடையுங்கள். மாதிரி பிரதிக்கு எங்களுக்கு எழுதுங்கள்.

சஞ்சிகையின் ஆண்டு சந்தா ரூ.80/- மட்டும்.

குறிப்பு: சத்தியவசன விசுவாசப் பங்காளர் குடும்பத்தில் இணைந்து ஊழியத்தை தாங்குபவர்கள் இப்பத்திரிக்கைகளுக்கென தனியாக சந்தா செலுத்த வேண்டியதில்லை.

இவ்வூழியத்தின் ஆரம்பம்

நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி..... மத். 28:19 என்ற இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு ஏற்ப 1939ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் தேதி டாக்டர் தியோடர் எப். அவர்களால் அமெரிக்காவிலுள்ள லிங்கன் நகரில் **"Back To The Bible"** ஊழியமானது ஆரம்பிக்கப்பட்டது.பின்னர் பல நாடுகளிலும் கிளைகளாக பரவியது. ஆண்டவருடைய பெரிதான கிருபையால் இவ்வூழியமானது வளர்ந்து பெருகி தற்போது உலக அளவில் விரிவடைந்துள்ளது. இந்தியாவில் நற்செய்தி ஒலிபரப்பு ஸ்தாபனம் **(The Good News Broadcasting Society)** என்ற பெயரில் செகந்திராபாத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவருகிறது. இவ்வூழியத்தின் தமிழ்பகுதி தான் சத்தியவசனம் வானொலி ஊழியமாகும். 1957ஆம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியவசனம் ஊழியம் இந்தியாவில் ஆரம்பத்தில் டெல்லியிலும் அதன் பின்னர் 1984ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் மதுரையில் இருந்தும் செயல்பட்டு வருகிறது.

இவ்வூழியத்தின் நோக்கங்கள்:

இது ஒரு சபைப் பாகுபாடற்ற சுயாதீனமான ஊழியமாகும். எமது பிரதான நோக்கங்கள்:

1. வெகுஜன தொடர்பு சாதனங்களின்(Mass Media) ஊடாக வேதசத்தியங்களை கற்றுக்கொடுப்பதன் மூலம் மக்களை ஜீவனுள்ள தேவனண்டை வழிநடத்துவதும்,
2. விசுவாசிகளை ஆவிக்குரிய முதிர்ச்சிக்குள் வழிநடத்துவதும்,
3. விசுவாசிகளை தங்கள் சபைகளிலும் உலகத்தார் மத்தியிலும் இயேசுகிறிஸ்துவுக்கென்று ஊழியம் செய்யும்படி ஊக்குவிப்பதும் ஆகும்.

இவைகளைத் தனது இலக்காகக்கொண்டு இயங்கிவரும் சத்திய வசனம் - **Back To The Bible** ஊழியமானது கிறிஸ்துவின் மாபெரும் கட்டளையை நிறைவேற்றுவதன் மூலம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஓர் அங்கமாக விளங்கி வருகிறது.

எந்தவொரு தனித்திருச்சபையையும் சாராத உலகளாவிய இச்சுயாதீன ஸ்தாபனமானது இயேசுகிறிஸ்துவினால் மீட்கப்பட்ட தேவபிள்ளைகளினால், அவர்களுக்கு அருளப்பட்ட தாலந்து களையும், திறமைகளையும், வரங்களையும் கொண்டு தேவ நாம மகிமைக்காக வானொலி பணி, தொலைகாட்சி ஊழியம், இலக்கியப்பணி, ஜெப ஊழியம், ஆலோசனைக் கடித ஊழியம், பாடல் ஊழியம் ஆகிய ஊழியங்களைச் செய்து வருகின்றது.

எமது ஊழியத்தின் பிரதானமான முதற்பணி வானொலி நிகழ்ச்சிகள் மூலம் ஆண்டவரைப் பற்றி அறிவிப்பதேயாகும். இப்பணியானது ஏறத்தாழ 55 ஆண்டுகளுக்கு மேலாக நடை பெற்று வருகிறது. தற்போது வாரந்தோறும் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் ஃபீபா வானொலியில் காலை 7.15 மணிக்கு சிற்றலை வரிசை SW49 மீட்டரில் ஒலிபரப்பாகி வருகிறது. நிகழ்ச்சிகளைக் கேட்டு ஆசீர்வாதமடையுங்கள்.

தொலைகாட்சி நிகழ்ச்சியின் வாயிலாகவும் மக்களுக்கு திருமறை பாடங்களைப் போதித்து வருகிறோம். இந்நிகழ்ச்சிகளில் இனிய பாடல்களும் வேதபாடங்களும் இடம்பெறுகிறது. இவ்வூழி யத்தின் மூலம் அநேகர் பிரயோஜனமடைந்து வருகின்றனர். தற்போது தமிழன் டிவியில் ஞாயிறுதோறும் நண்பகல் 12.00 மணிக்கும், திங்கள்தோறும் காலை 6.30 மணிக்கும் சத்தியவசன நிகழ்ச்சியை ஒளிபரப்பு செய்து வருகிறோம்.

வானொலி ஊழியத்திற்கு அடுத்ததாக இலக்கியப் பணி இவ்வூழியத்தின் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆவிக்குரிய செய்திகள் அடங்கிய சத்தியவசனம் என்ற இதழையும், அனுதின மும் கிறிஸ்துவுடன் என்ற தியானநூலையும் இருமாதத்திற்கு ஒருமுறை வெளியிடுகிறோம். இதின் மூலம் பிரயோஜனமடைந் தோர் அநேகர். மாதிரி பிரதிக்கு இன்றே எழுதுங்கள். இதைத் தவிர பல ஆவிக்குரிய புத்தகங்களையும் வெளியிட்டுள்ளோம். விபரங்களுக்கு எங்களோடு தொடர்பு கொள்ளவும்.

ஜெபமானது இவ்வூழியத்தின் முதுகெலும்பாயிருக்கிறது. நேயர் களும், விசுவாசப்பங்காளர்களும் ஏனைய சபை விசுவாசிகளும் கடிதங்கள் வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும், மின் அஞ்சல் (e-mail) வாயிலாகவும் எமக்குத் தெரிவிக்கும் விண்ணப்

பங்களுக்காக பாரத்தோடு விண்ணப்பம் செய்கிறோம். உங்கள் ஜெபத்தேவைகளை எங்களிடத்தில் தெரியப்படுத்தலாம். மேலும் இவ்வூழியத்தில் எங்களோடு இணைந்து ஜெபிக்கக் கூடிய அநேக ஜெப பங்காளர்களை தேவன் தந்துள்ளார். பலவிதமான பிரச்சனை களோடும் கவலைகளோடும் எங்களோடு தொடர்புகொள்ளும் மக்களுக்காக ஜெபிப்பதுடன் வேதாகமத்தின் அடிப்படையில் அவர் களுக்கு தகுந்த ஆலோசனைகளையும் அளிக்கிறோம். இப்பணியின் வாயிலாக அநேகர் ஆவிக்குரிய நன்மை அடைய தேவன் கிருபைச் செய்துள்ளார்.

மேற்கண்ட பணிகளோடு இணையதளத்தின் வாயிலாகவும், பாடல் சிடி மற்றும் செய்தி விசிடி ஆகியவற்றின் வாயிலாகவும் தேவ பணியை நிறைவேற்றி வருகிறோம்.

சத்தியவசன ஊழியம் செயல்படும் விதம்

இவ்வாறு பல்வேறு விதங்களில் நடைபெறும் எங்களது ஊழியத்திற்குத் தேவையான முழு பண உதவி எங்கிருந்து கிடைக் கிறது? எவ்வாறு இந்த ஊழியம் செயல்படுகிறது? என்று நீங்கள் சிந்திக்கலாம். முழுவதுமாக ஆண்டவரையே நம்பி விசுவாசத்துடன் துவக்கப்பட்ட இந்த ஊழியத்திற்கு ஆண்டவரே தலைவராக எஜமானனாக இருப்பதால் முன்னணியிலிருந்து நாங்கள் செயல்பட பின்னணியிலிருந்து எங்களைத் தாங்கும் விசுவாசப்பங்காளர்களை ஆண்டவர் எழுப்பி வருகிறார். ஆம், தங்கள் கரங்களை நீட்டி உதாரத்துவமாக கொடுக்கும், தங்கள் கால்களை முடக்கி அனுதினமும் ஜெபிக்கும் அன்பு விசுவாசப்பங்காளர்களால் இந்த ஊழியம் தாங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது ஆண்டவரு டைய கிருபையால் வளர்ந்து வரும் ஊழியமாகும். (P.T.O)

விசுவாச பங்காளர் படிவம்

சத்தியவசன ஊழியத்திற்கு ______________ மாதம் முதல் கீழே குறிப்பிட்டுள்ள தொகையை மாதந்தோறும் அனுப்பி ஊழியத்தைத் தாங்க முயற்சி செய்வேன்.

ரூ.40/-, ரூ.50/-, ரூ.100/-, அல்லது ____________

தேதி : கையொப்பம்.

(நீங்கள் கொடுக்க விரும்பும் தொகையைச் சுற்றி வட்டமிடுங்கள். காணிக்கையை மாதந்தோறும் அனுப்ப சிரமப்படுகிறவர்கள் தங்கள் வசதிப்படி ஒரு வருடத்திற்கோ, ஆறுமாதத்திற்கோ (அல்லது) மூன்று மாதத்திற்கோ ஒரு முறை சேர்த்து அனுப்பலாம். குறைந்தபட்ச வருடகாணிக்கை ரூ.400/–).

சத்தியவசன விசுவாச பங்காளர் குடும்பம்

விசுவாசப்பங்காளர்கள் ஒவ்வொருவரும் சத்தியவசன குடும்பத்தில் அங்கத்தினர்கள் ஆவர். நமது நாடு முழுவதும் பரந்துவிரிந்துள்ள இந்தக் குடும்பத்தில் ஏழை, பணக்காரர், சிறியவர், பெரியவர் என பலதரப்பட்ட மக்கள் அங்கம் வகிக்கின்றனர். விசேஷமாக இவர்கள் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் இயேசுராஜா ஊழிய பாரத்தைக் கொடுத்துள்ளபடியால் ஊழியத்திற்காக ஜெபித்தும், தங்களால் இயன்ற காணிக்கையை மாதந்தோறும் அனுப்பி இவ்வானொலி ஊழியத்தைத் தாங்கி வருகிறார்கள். இருப்பது ஒரே ஒரு வாழ்க்கை. அதுவும் சொற்ப காலம். இந்த அற்பமான வாழ்க்கையை அர்த்தம் நிறைந்த வாழ்க்கையாக மாற்ற, இராஜாவின் உன்னதப்பணியிலே எங்களோடே இணைகரம் நீட்டும்படியாக உங்களை அன்போடு அழைக்கிறோம்.

மாதாந்திர குறைந்தபட்ச விசுவாசப்பங்காளர் காணிக்கை ரூ.40/- அல்லது வருடத்திற்கு குறைந்தது ரூ.400/- ஆகும். இவ்வாறு விசுவாசப்பங்காளர்கள் குடும்பத்தில் அங்கத்தினர்களாகி இவ்வூழியத்தைத் தாங்கும் விசுவாசப்பங்காளர்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது இலக்கிய வெளியீடுகளான சத்தியவசன இருமாத சஞ்சிகையையும், அனுதினமும் கிறிஸ்துவுடன் எனும் இருமாத தியானப்புத்தகத்தையும் தவறாமல் அனுப்பி வைப்போம். விசுவாசப் பங்காளர்கள் பத்திரிக்கைகளுக்காக தனியாக சந்தா செலுத்த வேண்டியதில்லை. மேலும் வருடந்தோறும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கான புத்தகம் ஒன்றையும், காலண்டர் ஒன்றையும் அனுப்பி வைக்கிறோம். நீங்களும் சத்தியவசன விசுவாசப்பங்காளர் குடும்பத்தில் அங்கத்தினராக சேர விரும்பினால் கீழ்க்கண்ட படிவத்தை நிரப்பி எங்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

- - - - ✂ - - - - - - - - - - - - ✂ - - - - - - - - - - - - - - ✂ - - - -

பெயர் : ....

முகவரி: ....

....

Pin code: .... Phone: ....

குறிப்பு: நீங்கள் அனுப்பும் பணத்தை மணியார்டர் அல்லது டிராப்ட் மூலமாக அனுப்பி வைக்கலாம். பணம் அனுப்பும்போது சத்தியவசனம் என்ற பெயரிலேயே அனுப்பவும்.

சத்தியவசனம் பாடல்கள்

சத்தியவசன வானொலி நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகும் பாடல்கள் 22 பாகங்களாக ஒலிநாடாக்களில் ஏற்கனவே வெளிவந்துள்ளது. செவிக்கினிய இப்பாடல்கள் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது இப்பாடல்களை தொகுத்து MP3 சிடியாகவும், ஆடியோ சிடியாகவும் வெளியிட்டுள்ளோம். இதன் விபரமாவது:

சத்தியவசன பாடல் தொகுப்பு – 1 (MP3)

1. திருப்பாதம் நம்பி வந்தேன் (Vol-1)
2. ஓ! மனிதனே (Vol-2)
3. விசுவாசக்கப்பல் ஒன்று (Vol-3)

நன்கொடை ரூ.75/-

சத்தியவசன பாடல் தொகுப்பு – 2 (MP 3)

1. கிறிஸ்துமஸ் புதுவருட பாடல்கள் (Vol-4 & 7)
2. உயிரோடிருக்கும் கிறிஸ்து (Vol-5)
3. மீட்பர் பிறந்தார் (Vol-16)

நன்கொடை ரூ.75/-

சத்தியவசன பாடல் தொகுப்பு – 3 (MP 3)

1. இதயத்தாமரை (Vol-8)
2. இசைக்கதிர் (Vol-9)
3. ஆறுதல் கீதங்கள் (Vol-10)
4. Instrumental Music

நன்கொடை ரூ.75/-

சத்தியவசன பாடல் தொகுப்பு – 4 (MP3)

1. துதிகள் செலுத்துவேன் (Vol-12)
2. கர்த்தரை நான் பாடுவேன் (Vol-13)
3. நன்றிக் கீதங்கள் (Vol-14)
4. மேகமீதில் இயேசுராஜன் (Dr.சாம் கமலேசன் பாடல்கள்)

நன்கொடை ரூ.75/-

குறிப்பு: தபால் மூலம் சிடிக்களைப் பெற விரும்புகிறவர்கள் அதற்குரிய நன்கொடையோடு ரூ.35/- (3 சிடிக்கள் வரை) கூடுதலாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

சத்தியவசன பாடல் தொகுப்பு – 5 (MP3)

(Dr. புஷ்பராஜ் பாடிய பாடல்கள்)

1. பலன் கொடுப்பீர் (Vol - 11)
2. ஒரு வார்த்தை சொல்லும் (Vol-15)

நன்கொடை ரூ.75/-

சத்தியவசன பாடல் தொகுப்பு – 6 (MP3)

(சிறுவர் பாடல்கள்)

1. சின்னச் சிட்டுக்குருவியே (Vol - 6)
2. டேய் குட்டிப்பயலே (சிறப்பு வெளியீடு -2)

நன்கொடை ரூ.75/-

ஆடியோ பாடல் சிடிகள் (Audio CDs)

என்றும் எம்மை வழிநடத்தும் (Vol - 17)

வேதபுத்தகமே, வேதபுத்தகமே (Vol - 18)

சமர்ப்பணம் (Vol - 19)

மீட்பின் கீதங்கள் [சிறப்பு வெளியீடு -3]

ஆடியோ பாடல் சிடி ஒவ்வொன்றும் ரூ.50/- மட்டும்.

சத்தியவசன செய்திகள் [MP3] சி.டி.யில் வெளிவந்துள்ளது!

1. டாக்டர் புஷ்பராஜ் வழங்கிய செய்திகளின் தொகுப்பு -1 - 10 செய்திகள்
2. டாக்டர் புஷ்பராஜ் வழங்கிய செய்திகளின் தொகுப்பு -2 - 9 செய்திகள்
3. டாக்டர் சாம் கமலேசன் மற்றும் சகோதரர் பிரகாஷ் ஏசுவடியான் வழங்கிய செய்திகளின் தொகுப்பு - 11 செய்திகள்
4. பாகவதர் வேதநாயகம் சாஸ்திரியார் மற்றும் கவி. சுசி பிரபாகரதாஸ் வழங்கிய செய்திகளின் தொகுப்பு - 8 செய்திகள்
5. டாக்டர் தியோடர் வில்லியம்ஸ் செய்திகளின் தொகுப்பு - 4 செய்திகள்
6. வேதநாயகம் சாஸ்திரியார் காலட்சேபம் MP3 CD நோவா பேழை/சகேயு

சிடி ஒன்றிற்கு நன்கொடை ரூ.75/-, தபால் செலவு ரூ.35/- (3 சிடிக்கள் வரை).

சத்தியவசன புத்தக வெளியீடுகள் !

		Rs.
01.	தேவனோடு தினமும் நடத்தல்	10.00
02.	விசுவாசக் கப்பல் ஒன்று செல்கின்றது	10.00
03.	ஆவியின் கனி	25.00
04.	மெய் வாழ்வு (பாகம் -1 & 2)	20.00
05.	வீழ்ச்சியில் கிருபை	20.00
06.	யோனா	25.00
07.	பரலோகம் செல்ல உமக்கு விருப்பமா?	10.00
08.	ஞானமுத்துக்கள் பத்து	25.00
09.	பயத்திலிருந்து விடுதலை	25.00
10.	மரண இருளின் பள்ளத்தாக்கில்	25.00
11.	எபேசியர் விளக்கவுரை	100.00
12.	சத்தியவசனம் பாடல் புத்தகம்	65.00
13.	புதிய விசுவாசிகளுக்கான பத்து முதற்படிகள்	10.00
14.	போஷிக்கும் தேவன்	10.00

சகோதரர் M.S. வசந்தகுமார் புத்தகங்கள்

01.	மனக்கலக்கத்திற்கு மருந்து (42 & 43 ஆம் சங்கீதங்களின் விளக்கவுரை)	20.00
02.	துன்மார்க்கரின் வளமும் நீதிமானின் துயரமும் (73ஆம் சங்கீதத்தின் விளக்கவுரை)	20.00
03.	ஒத்தாசையாயிருக்கும் ஒப்பற்ற தேவன் (121ஆம் சங்கீதத்தின் விளக்கவுரை)	15.00
04.	வயோதிபகாலத்திலும் வழிநடத்தும் கர்த்தர் (71ஆம் சங்கீதத்தின் விளக்கவுரை)	20.00
05.	புண்பட்ட உள்ளங்களில் புறப்படும் உணர்வுகள்	15.00

சத்தியவசன வானொலி பணி

"நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி...." (மத்.28:19)

சத்தியவசன வானொலி நிகழ்ச்சியானது கடந்த 55 ஆண்டுகளாக ஒலிபரப்பாகி வருகிறது. இந்நிகழ்ச்சிகளில் வேதபாடம் பிரதான இடம் வகிக்கிறது.

இந்தியா மற்றும் இலங்கையில் வசிக்கும் தமிழ் பேசும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்ச்சிகளைக் கேட்டு ஆசீர்வாதமடைந்து வருகின்றார்கள். இந்த வானொலி நிகழ்ச்சி மூலம் தங்கள் வாழ்வில் மாற்றமடைந்தவர்களும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றவர்களும் எண்ணற்றோர்!

தற்போது இந்நிகழ்ச்சிகள் ஃபீபா வானொலியில் சிற்றலை SW 49 மீட்டரில் காலை 7.15 மணி முதல் 7.30 மணி வரை திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் ஒலிபரப்பாகி வருகின்றன. இந்த நிகழ்ச்சிகளை குடும்பமாய்க் கேட்டு ஆசீர்வாதமடையுங்கள்.

சத்தியவசன வானொலி நிகழ்ச்சி ஆதரவாளர் திட்டத்தில் (Radio Programme Sponsor Scheme) இணைந்து வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பில் எங்களுக்கு உதவலாம். மேலும் விபரங்களுக்கு எமது முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தமிழன் தொலைகாட்சியில்

சத்தியவசனம் திருமறைப் பாட நிகழ்ச்சிகள்

ஞாயிறு தோறும் நண்பகல் 12 மணிக்கு

திங்கள் தோறும் காலை 6.30 மணிக்கு

இந்நிகழ்ச்சியில் சத்தியவசன வானொலி செய்தியாளர்கள் வழங்கும் திருமறைப் பாடங்களும் சத்தியவசன இனிய பாடல்களும் இடம்பெறுகிறது.

குடும்பமாக பங்குபெற்று ஆசிர்வாதம் பெற அன்புடன் அழைக்கிறோம்.

"சாத்தான் மீது நீங்கள் வெற்றி கொள்ள வேண்டுமானால் நீங்கள் பின்பற்ற வேண்டிய வழிகள் வேதாகமத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. சாத்தானை நம்மால் தோற்கடிக்க முடியும். அவன்மேல் வெற்றி கொள்வதற்கு தேவ ஆவியானவர் நமக்கு எவ்வாறு உதவுகிறார் என்பதை நாம் அறிந்துகொண்டால் போதுமானது. ஒருபோதும் மறந்துவிடாதீர்கள், நீங்கள் வேதாகம முறைப்படி சாத்தானை எதிர்த்தால் அவன் உங்களைவிட்டு ஓடிவிடுவான். ஏனெனில் தேவனுடைய வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் உள்ளது"

சாத்தானின் தாக்குதல்கள் நம்முடைய வாழ்வில் வரும்போது, வேதாகம சத்தியங்களை விசுவாசிகள் கையில் எடுத்துக்கொள்ள இந்தப் புத்தகம் அறைகூவல் விடுக்கிறது. வேதாகமத்தில் உள்ள ஆவிக்குரிய ஆயுதசாலையிலிருந்து ஆயுதங்களை எடுத்து சாத்தான் விரிக்கும் கண்ணிகளையும், வலைகளையும் எவ்வாறு அறுத்தெறிவது என்பதைக் குறித்து அறிவர் உட்ரோகுரோல் விளக்குகிறார். எதிராளியின் பலவீனங்களைக் குறித்து இப்புத்தகத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய பலத்தையும் சுட்டிக்காட்டுகிறார்.

அறிவர் குரோல் அவர்கள் வேதாகம சத்தியங்களுக்கு நம்முடைய கவனத்தைத் திருப்பி, தேவனுடைய பரிசுத்த வார்த்தைகளின் வல்லமையை நாம் தெரிந்து கொள்ளச் செய்கிறார். வானமண்டலத்தில் சாத்தான் ஒருமுறை தோற்கடிக்கப்பட்டுள்ளான். இங்கே பூமியில் ஆளத்துவத்துடன் அவன் கிரியை செய்யும் வேளையிலும் அவனைத் தோற்கடித்து விடலாம். சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் யாரை விழுங்கலாம் என்று சுற்றித்திரிகிறான். ஆனால் அவன் கயிற்றில் கட்டப்பட்டிருக்கிறான். அவனுடைய வீரப்பற்கள் யாவும் பிடுங்கப் பட்டுள்ளன. உங்களுக்குக் கர்த்தர் தந்துள்ள வாக்குத்தத்தம்:

"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக். 4:7).

அறிவர் உட்ரோ குரோல் "வேதாகமத்திற்கு திரும்புக" (Back To The Bible) பன்னாட்டு ஊழியத்தின் தலைவரும், வேதாகம ஆசிரியரும் ஆவார்.

சத்தியவசனம்
9,வெங்கட்ராமன் ரோடு, சின்ன சொக்கிகுளம்,
த.பெ.எண்.55, மதுரை–625002. போன்: 0452–2532316
E-mail: <svmadurai@bsnl.in> <svmadurai@yahoo.co.in>
Website : sathiyavasanam.in